உ

சிவமயம்



# சிறுவை

# கலை பண்பாட்டு விழா மலர்







## சிறுப்பிட்டி

## கலை பண்பாட்டு மன்றம்

விகிர்தி வருஷம்

தை மாதம் 9ம் நாள்

23.01.2011

உ

சிவமயம்

# சிறுவை



## சிறுப்பிட்டி
## கலை பண்பாட்டு விழா
## மலர்


மலராசிரியர்

சைவப்புலவர்

செ. கந்தசத்தியதாசன் M.A.



**சிறுப்பிட்டி**

**கலை பண்பாட்டு மன்றம்**


**விகிர்தி வருடம் தை மாதம் 16ம் நாள்**

**23.01.2011**

சிறுப்பிட்டி கிராம கலை பண்பாட்டு விழா சிறப்புற எம் வாழ்த்துக்கள்



# நாதன் சவுண்ஸ்



## ஒலி அமைப்பாயளர்

**சிறந்த இலத்திரனியல் உபகரணங்கள்**

**Radio T.V, Computer திருத்துதல்**

பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி வடக்கு.

சுதர்சன்
T.P : 021 300 6934

# ஐங்கரன் நெற்கொம் & போட்டோ

Photo Copy
Local Call
IDD Call
Video Call
Reloads, Cards, Sim
Internet & Email
Net Browsing
Fax
Cd Writting
&
Photo



Siruppiddy North,
Neervely.
Tp.0217429750
0774246053
Fax.0217429751

Email. n.anjsanan@yahoo.com



யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட செயலர்

## திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்

வழங்கிய

# ஆசிச் செய்தி

பண்பாடு என்னும் சொல் பரந்த பொருளுடன் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகக் காணப்படுகின்றது. மானிடவியலுடன் நெருங்கிய கருத்து வாக்கத்தைக் கொண்ட பண்பாடானது ஒரு இனத்தின் தனித்துவ அடையாளங்களை வெளிப்படுத்தவல்ல கூறாகவும் காணப்படுகின்றது.

பண்பாடு பற்றிய விழுமியங்களை மக்கள் மனங்களில் விதைப்பதற்கும், கட்டியெழுப்புவதற்கும் பிரதேசங்கள் ரீதியாகப் பண்பாட்டு விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகத்தினர் இன்னும் ஒருபடி கீழிறங்கி கிராம மட்டத்தில் பண்பாட்டு விழாவை நடத்த முன்வந் திருப்பது இத்துறைசார் எழுச்சிக்குக் கலை நல்ல அத்திவாரமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

வலிகாமம் கிழக்கில் உள்ள சிறுப்பிட்டிக் கிராமம் நாடு போற்றும் நற்றமிழ் அறிஞர்களை ஈன்றளித்த சிறப்பிற்குரியது. பதிப்புச் செம்மல் சி.வை.தாமோதரம்பிள்ளை, ஈழத்தின் ஆரம்ப கால நாவலாசிரியர் சி.வை.சின்னப்பிள்ளை முதலியோர் இக்கிராமத்திற்குப் பெருமை சேர்க்கும் அறிஞர் பெரு மக்களுள் தலையாயவர்கள்.

பண்பாட்டு விழாவின்போது சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களைக் கௌரவிக்கக்கூடிய வகையில் அவர் பெயரால் அரங்கு அமைக்கப்படுகிறது. சிறுப்பிட்டி பிரதேச மக்களின் நன்றியுணர்வை வெளிக்காட்டுவதாக இச்செயற்பாட்டைக் கருதிக் கொள்ளலாம்.

எம்மவரின் பண்பாட்டம்சங்களைப் புத்தெழுச்சியடையச் செய்வதாகவும் இவற்றின்பால் இளையோரை நாட்டங்கொள்ள வைப்பதாகவும் கலை பண்பாட்டு விழா அமைவது சிறப்பானது. எம் மக்களின் மன அமைதிக்கும் பண்பாட்டு எழுச்சிக்கும் இவ்விழா வழிகோல வாழ்த்துகின்றேன்.

கிராமியக் கலை பண்பாட்டு விழா ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பிரதேச செயலர், விழாக் குழுவினர், கிராம அலுவலர்கள் யாவருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

திருமதி. இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர், மாவட்ட செயலர்,
யாழ் மாவட்டம்.



உ
கணபதிதுணை



# சிறுப்பிட்டி தெற்கு
# அருள்மிகு செல்லப்பிள்ளையார் ஆலய
# பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச. உமாசுதசர்மா

## அவர்களின்

# ஆசியுரை

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசி வர்ணம் சதுர்ப்புயம்
பிரசன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே

சைவ சமயம் சனாதனமானது கலை, கலாச்சார பண்பாடுகளோடு பின்னிப் பிணைந்தது. இறைவர்களது திருவுருவங்களே கலைத்துவமுடையது ஆலயங்கள், பூசை முறைகள், உற்சவங்கள் கலையில்லாமல் இல்லை. கலை மனிதனோடு மனித உள்ளத்தோடு பின்னிப் பிணைந்தது. இவ்வகையான கலைகளினால் நம்முன்னோர்களின் பண்பாடுகள் இன்றும் எமக்கு பெரு மையைத் தருகின்றது.

விவசாயி நிலத்தைப் பண்படுத்திய பின்னே நல்ல பயிர்களை விளைவிக் கின்றான். இதேபோன்று மனித மனங்களின் பண்பினால் வளர்வது பண்பாடு ஆகும். எம்முன்னோர்களின் கலை, பண்பாடுகள் மற்றோருக்கு தீமை செய்யாது எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் பண்பாட்டைக் காண முடிகின்றது.

எமது கிராமத்தில் வாழ்ந்த எத்தனையோ பேர் எமது கலை பண்பாட்டை வளர்த்திருக்கின்றார்கள் இவர்களில் இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை குறிப்பிடத்தக்கவர். இன்றும் எத்தனையோ கலைஞர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும். கலைகள் போற்றப்பட வேண்டும். இந்த முயற்சியில் சிறுப்பிட்டி கலை பண்பாட்டு மன்றம் செயற்படுவதும் கலைஞர்களைப் பாராட்டுவதும் கலை பண்பாட்டை வெளிப்படுத்துவதும் மிக மிக நன்று இவை நன்றாய் நடைபெறவும் இவ்விழா சிறக்கவும் ஆசி கூறுகிறேன். என்றும் பிள்ளையாரின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ஸர்வ மங்களம் உண்டாகட்டும்.

உ

கணபதிதுணை



### யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்

## திருமதி. ரூபினி வரதலிங்கம் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

இயற்கை வாழ்விடங்களே கலைகளின் பிறப்பிடங்களாகும். இயற்கை தரும் இன்பம் இணையிலாப் பேரின்பம் என்பதை யாவரும் அறிவர். இயற்கையின் கொடையாக விளங்கும். கலைகளில் மயங்காதார் எவருமில்லை.

எமது யாழ் குடாநாட்டில் இயற்கை அழகு நிறைந்து தெய்வீக மணம் கமழும் பிரதேசங்களுள் சிறுப்பிட்டியும் ஒன்று. குடாநாட்டின் விவசாயத் தேவைகளுள் கணிசமான பங்கை இக்கிராமம் நிறைவேற்றி வருகின்றது. செந்நெற் கழனிகளாலும் செவ்வாழைத் தோட்டங்களாலும் பொலிவு பெற்றுள்ள இவ்வூர் தமிழின் வாழ்வுக்குத் தம்மை அர்ப்பணித்த பெரியோரையும் ஈந்தளித்துள்ளது.

எதனையும் கலாபூர்வமாக அனுபவிக்கும் திறன் இப்பிரதேச மக்களிடம் காணப்படுகின்றது. நெற்பயிற் செய்கையாயினும் சரி முந்திரிகை செய்கை, தோட்டக் கட்டுமாணம் ஆயினும் சரி இவர்களது கலாரசனையைக் கண்டு கொள்ளலாம். இத்தகையவர்கள் எமது கலை, பண்பாட்டம்சங்களில் முதன்மை பெற்றுத் திகழ்வதில் வியப்பில்லை.

வலிகாம் கிழக்குப் பிரதேச செயலகத்தார் கிராமந்தோறும் கலை பண்பாட்டு விழாக்களை நடாத்த முன்வந்திருக்கின்றனர். கிராம மட்டத்தில் இடம்பெறும் முதலாவது விழா சிறுப்பிட்டிக் கிராமத்தில் இடம்பெறுகின்றது. இது ஒன்றே இக்கிராமத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்குக் கலையுணர்வு இன்றியமையாதது. இந்த நன்நோக்கை ஈடேற்றக்கூடிய வகையில் வலிகாமம் கிழக்கில் இடம் பெறும் முதலாவது விழா சிறப்புற எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இவ்விழாவை ஒழுங்கு செய்துள்ள பிரதேச செயலர், கிராம அலுவலர்கள், சிறுபிட்டியூர் கலைஞர்கள், கலையார்வமுள்ள மக்கள் யாவருக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.ரூபினி வரதலிங்கம்
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

உ

கணபதிதுணை



# வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் திரு.ம.பிரதீபன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

இன்றைய கால கட்டத்தில் எமது பண்பாட்டை பேணும் முயற்சியிலும் அதனை மேலும் மெருகூட்டி கட்டியெழுப்பும் முயற்சியிலும் ஈடுபடுவது காலத்தின் கட்டாய தேவையாகின்றது

இதனால் பிரதேச மட்டத்தில் மட்டுமன்றி கிராம ரீதியாகவும் கலை, பண்பாட்டு விழாக்களை நடாத்தி எம் கலை கலாசார பண்பாடுகளை பேண முயற்சிக்கலாம் என நான் எண்ணிய போது அதனை ஆர்வத்துடன் ஏற்று உடனடியாக செயல்வடிவம் கொடுக்க முனைந்த சிறுப்பிட்டி கிழக்கு கிராமசேவையாளர் திரு. க. சிறிஸ்கந்தராசா, சிறுப்பிட்டி மேற்கு கிராம சேவையாளர் திரு. சி. தயாபரன் ஆகியோருக்கு எனது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்து கொள்கின்றேன்.

கிராமிய ரீதியாக இக்கலை, பண்பாட்டு விழாக்களை நடத்துவதன் மூலம் இலைமறை காயாக உள்ள கலைகளையும் கலைஞர்களையும் வெளிக் கொண்டுவர முடியும் என்பது என் நம்பிக்கை. இதில் இளையோர் முதல் முதியவர்கள்வரை பங்குகொண்டு எம் பிரதேசத்து கலைகளை வளர்க்க முனைந்துள்ளனர். தமிழர் கலை, பண்பாட்டை வளர்ப்பதில் நாமும் பங்களிப்பு செய்கின்றோம் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பல அறிஞர்களையும், கலைஞர்களையும் உருவாக்கிய சிறுப்பிட்டிக் கிராமம் இக்கலைபண்பாட்டு விழாவின் மூலம் மேலும் பல கலைஞர்களை உருவாக்க வேண்டும். ஏற்கனவே இருக்கின்ற கலைஞர்களை இன்னும் வளர்க்க வேண்டும் என்பதே எனது ஆவல்.

இதேபோன்று எமது வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தின் சகல கிராமசேவையாளர் பிரிவுகளிலும் இக்கலை பண்பாட்டு விழாக்களை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனை முன்னின்று செயற்படுத்திய செயற்குழுக்களும் இன்றைய விழாவினை முன்நின்று செயற்படுத்துகின்ற செயற்குழு வுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ம.பிரதீபன்
பிரதேச செயலர், வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்



கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர்

**திரு. வே.கா. கணபதிப்பிள்ளை அவர்களின்**

[illegible] கிய

# வாழ்த்துச் செய்தி

கிராமந் தோறும் கலை பண்பாட்டுவிழா என்ற புத்தெழுச்சியை வலி.கிழக்குப் பிரதேச செயலகம் ஏற்படுத்த முன்வந்திருப்பது பாராட்டிற்குரியது. இதன் முதல் நிகழ்வு எங்கள் கிராமத்தில் இடம்பெறுவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.அருகி வரும் கிராமியக் கலைகளை, பண்பாட்டம்சங்களை வெளிக் கொணர்வதற்கு இத்தகைய விழாக்கள் பேருதவி புரியும் என நம்புகின்றேன்.

மனிதன் கூட்டமாக வாழத் தலைப்பட்டபோது இனம், சமூகம் என்ற அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. மக்கள் கூட்டம் தங்களுக்குரிய தனித்துவங்களை ஆக்கத் தலைப்பட்டனர். இத்தனித்துவங்கள் பண்பாட்டம்சம் களாகப் பேணப்படலாயின.

பண்பாடு என்பதனால் மனித செயற்பாட்டுக் கோலங்களும் அத்தகைய செயற்பாடுகளுக்கான சிறப்புத் தன்மைகளும் அதற்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கும் குறியீட்டு அமைப்புக்களும் சுட்டப்படுகின்றன. இந்தப் பின்புலத்துடன் எமது பண்பாட்டின் இருப்பைப் பேணிப் பாதுகாப்பதற்கும் அவை பற்றிய விழிப்புணர்வை இளஞ்சந்ததியினரிடையே விதைப்பதற்கும் எமது கிராமப் பண்பாட்டு விழா உதவும் என எதிர்பார்க்கின்றேன். எமது கிராமத்தின் பெருமைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் விளங்கும் சி.வை.தாமோதரம்பிள்ளை பற்றிய பிரக்ஞையுடன் இந்த கலை பண்பாட்டு விழா இடம்பெறுவது பாராட்டிற்குரியது.

புதிதாகப் பணிப் பொறுப்பேற்றிருக்கும் பிரதேச செயலர் திரு ம. பிரதீபன் அவர்கள் இளமைத் துடிப்புடன் இந்த முன்னெடுப்புக்களை நெறிப் படுத்தி வருகின்றார். எமது கிராம உத்தியோகத்தர்களான திரு. க.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களும் திரு.சி. தயாபரன் அவர்களும் விழாச் செயற் பாடுகளை முழுமூச்சுடன் முன்னெடுக்கின்றனர். விழாவின் நோக்கம் ஈடேறவும் விழாச் செயற்பாடுகள் வெற்றி பெறவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"வாழ்க தமிழ் வளர்க கலை மிளிர்க எம் பண்பாடு"**



உ

சிவமயம்

**சிறுப்பிட்டி கிழக்கு கிராம சேவையாளரும்**

**சிறுப்பிட்டி கலை பண்பாட்டு மன்ற**

**இணைச் செயலாளருமாகிய**

## திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின்

# சிந்தனை

மனிதன் ஓர் உயர்ந்த விலங்கு. ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுடன் வாழ்கின்றான். வாழ்வில் தெய்வீகத்தை உணர்ந்தான். வழிபாட்டில் மட்டுமன்றி வாழ்வில் ஒவ்வொரு விடயங்களிலும் கலையுணர்வு பிரதிபலித்தது. நம்மவர்களின் கிராம வாழ்க்கை மேன்மையானது பாரம்பரியங்கள் பண்பாடுகள் நிறைந்தது. கோயில்களில் கட்டிடம், சிற்பம், இசை, நடனம், நாடகம், இசைக்கருவிகள் எல்லாமே கலைப் பொக்கிஷம், தெய்வ அலங்காரங்கள் ஆடை அணிகலன்கள் பூமாலை அலங்காரம், படைக்கும் நிவேதனம், ஏற்றும் தீபங்கள், விளக்குகள், இறைவன் பவனி வரும் வாகனங்கள், சப்பறம், தண்டிகை, தேர், மஞ்சம் என எல்லாவற்றிலும் கலையுணர்வுகள் வெளிப்படுவதைக் காணலாம் கலையின்பமே இன்பம் என்று கூறுமளவிற்கு கலை எல்லோரையும் இன்பத்தில் மகிழ்விக்கின்றது.

இத்தகுகலைகள் நம்மினத்தின் பண்பாட்டு அம்சமாக மிளிர்கின்றது. எமது கலாசாரத்தை நமது இனத்தவர்களை வெளிக்கொணர்கின்றது. அழகைத் தருகின்றது. இத்தகு கலைகள் மேலை நாட்டவராலும் பாராட்டப்பட்டு இன்று மேலைத்தேயத்திலும் நமது கலைகளைப் பின்பற்றுவோரைக் காணமுடிகின்றது.

நம் நாட்டில் இன்று வெளிநாட்டு மோகம், தொலைத்தொடர்பு வசதிகள் எம்மினத்தின் கலை பண்பாடுகளை மறக்கச் செய்கின்றது. முன்னைய கலைஞர் களை பாராட்டத் தவறுகின்றனர். புதிதாக கலைகளைப் பயில மறுக்கின்றனர். இத்தகு சூழலில் நம் சிறுப்பிட்டிக் கிராமத்தின் பெருமையையும் பேணிய கலை, பண்பாட்டு மரபுகளையும் நினைவு கூரவும் புதிய கலைஞர்களை உருவாக்கவும் சிறுப்பிட்டிக் கிராமத்தின் பெருமையை இன்றும் நினைவு கொள்ளத்தக்க வகையில் வாழ்ந்த சி.வை.தாமோதரம்பிள்ளை அரங்காக கலை பண்பாட்டு விழாவை நடாத்துவதோடு கலைஞர்கள் சிலரைத் கௌரவித்தும் கலை பண்பாட்டு மலரை வெளியிட்டும் இவ்விழாவை முன்னெடுக்கின்றோம். எமக்கு நல்வழி காட்டிய பிரதேச செயலர் ம.பிரதீபன் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். குறுகிய கால முயற்சியில் பங்களிப்புச் செய்த அனைவரையும் போற்றுகின்றேன். பாராட்டுகின்றேன். நன்றி கூறுகின்றேன். எல்லாம் நன்றாக அமைய செல்லப்பிள்ளையாரின் துணை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

"கலைகளைப் போற்றுவோம் பண்பாட்டைக் கடைப்பிடிப்போம்."



உ

சிவமயம்

**சிறுப்பிட்டி மேற்கு கிராம சேவையாளரும்**
**சிறுப்பிட்டி கலை பண்பாட்டு மன்ற**
**இணைச் செயலாளருமாகிய**
**திரு.சி.தயாபரன் அவர்களின்**

# சிந்தனை

யாழ்ப்பாணமே யாழ்பாடிக்குக் கிடைத்த பரிசு நிலமாகும். யாழ்.மாநகர சபையின் சின்னம் இன்றும் யாழே. சங்க காலத்தில் யாழ் முக்கிய இசைக்கருவி இன்று அந்த கருவியை இழந்துவிட்டோம். இதேபோன்று இல்லாமல் நம் கலைகளையும் கலாசார பண்பாடுகளையும் பேச வேண்டும் கலைஞர்களைப் போற்ற வேண்டும். புதிய கலைஞர்களை உருவாக்க வேண்டும். இவர்களால் எமது சிறுப்பிட்டி கிராமம் மகிமை பெறல் வேண்டும்.

இன்றும் சி.வை.தாமோதரம்பிள்ளையைப் பற்றி தமிழுலகம் சிந்திக்கும் போது சிறுப்பிட்டியைப் பற்றி சிந்திக்கின்றார்கள் பேசுகிறார்கள். எனவே பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை வளர்க்கப்பட்டிருக்கும் கலை பண்பாடுகளை எமது கிராம மக்கள் பேண வேண்டும் எனும் அவாவினாலும் அதற்கு நல்லதொரு வழிகாட்டியாக எமது பிரதேச செயலர் திரு. ம. பிரதீபன் அவர்கள் வழிகாட்டியதற்குமமைய இக்கலை பண்பாட்டு விழாவை முதன் முதல் எமது பகுதியில் நடாத்துகின்றோம்.

இவ்வகையில் இவ்விழாவிற்கு உதவி புரிந்த கலைஞர்கள், பெரியோர் கள், நிதி உதவி செய்தோர்கள், சிறுப்பிட்டி மேற்கு ஆர்வலர்கள், குறிப்பாக இளைஞர்களைப் பாராட்டுகின்றேன். மேன்மேலும் எதிர்காலங்களில் இவை வளர்ச்சியடையப் பிரார்த்திக்கின்றேன். எல்லோருக்கும் நன்றி கூறுகின்றேன்.



## வாழிய கலைகள் வளர்க நம் பண்பாடு

**செல்வி. அ.மிலாசினி**

*கலாசார உத்தியோகத்தர், கோப்பாய்.*

ஒரு சமூகம் முன்னேற்றம் அடைவதற்கு அடித்தளமாக இருப்பது கல்வியும் கலாசாரமுமாகும். ஒரு சமூகத்தின் தரம், அதன் நாகரீக வளர்ச்சி நிலை, உலகளாவிய அரசியல், பொருளாதார வீச்சு போன்றவற்றை அந்த சமூகத்தின் கல்வியும் கலாசாரமும் தான் நிர்ணயிக்கும்.

அந்த வகையில் காலத்தின் தேவையறிந்து எமது மரபுவழி இலக்கிய வாதியான சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் எமது தமிழுக்கு ஆற்றிய சேவைகளை மனங்கொண்டு அவரை நினைவுகூருவது எம்மவரின் கடமை யாகும். இந்நன்நாளில் அவர் நினைவாக விழா எடுப்பது சிறப்பிற்கு உரியதாகும்.

சிறுப்பிட்டிக் கிராம கலை பண்பாட்டை மையமாகக் கொண்டு வெளியிடப்படுகின்ற இச்சிறப்புமிக்க மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இம் மலர் மலர்ந்து எங்கும் மணம் வீச எனது உளம் நிறைந்த வாழ்த்துக் களை கூறி நிற்கின்றேன்.




**சிறுப்பிட்டி மேற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்**

**திரு. பி.தயேந்திரன் அவர்களின்**

## சிந்தனை

சிறுப்பிட்டி கலை பண்பாட்டு மன்றம் நடாத்தும் கலை பண்பாட்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கலை என்பது எமது மக்களது வாழ்வியல் முறையோடு பின்னிப் பிணைந்த ஒரு அம்சமாகும். எனவே இக்கலை பண்பாட்டு விழா ஊடாக இக்கிராமங்களில் வாழுகின்ற எல்லா வகையான மக்களது மனங்களும், சிந்தனைகளும், பண் படும் என்பதில் ஐயமில்லை. எனவே எமது இரு கிராம அலுவலர் பிரிவுகளும் ஒன்றிணைந்து எமது கலை, பண்பாட்டு விழுமியங்களை வளர்ப்பதற்கும் அபிவிருத்திப் பணிகளை ஒருங்கிணைந்து முன்னெடுப்பதற்குமான உந்து சக்தியாக இவ்விழா அமைகின்றது எனவே விழா சிறப்பாக நடைபெற இறையருள் வேண்டுகின்றேன். நன்றி கூறுகின்றேன்.



உ

ஓம் நமசிவாய

*மலராசிரியர்*

அருட்சொல்வாரி அருள்நெறித்தமிழருவி அருள்நெறிச்செல்வர்,
செஞ்சொற்செல்வர், சைவசித்தாந்தவாரிதி, சைவசித்தாந்தகலாநிதி
சைவசித்தாந்தபண்டிதர், சைவப்புலவர்

**செ.கந்தசத்தியதாசன்** J.P.

(M.A. in Shaiva Shiththantham) **அவர்களின்**

# வாழ்த்துரை

*தமிழர் வாழ்வு பழமையானது அதேவேளை புதுமைகளைக் கொண்டது. சைவமும் தமிழும் பின்னிப் பிணைந்தது தமிழிலக்கிய வரலாற்றைச் செழுமைப் படுத்திய நூல்களில் பெரும்பாலானவை இந்துசமயம் சார்ந்தது பழந்தமிழர் வரலாற்றுக் காலத்தில் தமிழைக் கலைகளை வளர்க்க எம்பிரான் முருக வேளும் அகத்தியரும் புலவர்களும், சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் இணைந்து சங்கம் அமைத்து பாதுகாத்தனர். இவ்வாறு காலத்துக்குக் காலம் தமிழர் வாழ்வில் கலை பண்பாடுகள் வளர்க்கப்பட்டு வந்ததோடு அவை சார்ந்த இலக்கியங்களும் எழுந்து வந்தமையைக் காண முடிகின்றது.*

*சங்க காலத்திலேயே கலையின் சிறப்புக்கு கூத்தராற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, சிலப்பதிகாரம், திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் போன்றன சான்றாகிறது. மேலும் பல்லவர் காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் இசைக் கலையை நன்கு வளர்த்தார்கள். மன்னர்கள் இசை, நடனம், கட்டிடம், சிற்பம் ஆகிய கலைகளை வளர்த்தனர். சிவபெருமானே ஏழிசையாய், இசைப்பயனாய், சுருதிவானவனாய், பண்ணும் பதமேழாகவும் உள்ளான் என்பதை வெளிப்படுத்தினார்கள். இசைக் கருவிகள் பல வழக்கி லிருந்தமையை தேவாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.*

*சோழர் காலத்தில் எமது கலை பண்பாடு உச்ச வளர்ச்சியடைந்தது. சோழ மன்னர்கள் கருங்கற்களால் கட்டிடங்களை வானளாவ அமைத்தனர். அங்கே பல சிற்பங்கள் அமைத்தனர் ஓவியங்கள் வரைந்தனர் கோயில்களில் இசைக்கலை, பண்ணிசை, நடனக்கலை, நாடகக்கலை என்பவற்றை வளர்த் தனர் இவ்வாறு ஆலயங்களூடாக வளர்க்கப்பட்டு வந்த கலை எமது பண் பாட்டு சின்னங்களாகக் காணப்படுகின்றது.*

*இவ்வகையான எமது கலை பண்பாடுகள் எமது சமயம், எமது மொழியைக் கடந்து பிற்காலத்தில் வேறு சமயத்தவர்கள், வேறு மொழியைப் பேசுகின்றவர்களும் கடைப்பிடிக்கத் தொடங்கினர். கடல் கடந்து, நாடு கடந்து கிழக்கிலும், மேற்கிலும் பரவத் தொடங்கியது. இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற எம் தமிழர்கள் இக்கலைகளைப் போற்றுகின்றனர் வளர்க்கின்றனர். இவற்றை அறிந்து அந்தந்த நாடுகளில் வாழ்கின்றவர்களும்*

இக்கலை பண்பாடுகளை தாமும் இரசிக்கின்றனர். அதன் மேன்மையைப் போற்றுகின்றனர்.

இந்த மேன்மைமிக்க பாரம்பரியக் கலைகள் இன்று நம்நாட்டு இளந்தலை முறையினரிடையே அருகி வருவதைக் காண முடிகின்றது. இவற்றை பேணவும் எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்குவதும் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் போன்ற பெரியோர்களது கடமையாகும். இந்த வகையில் சிறுப்பிட்டி கிராமக் கலை பண்பாட்டு மன்றம் 2011ம் ஆண்டின் ஆரம்பத்திலேயே கலை பண்பாட்டு விழாவை கொண்டாடுகின்றது.

இவ்விழாவில் கலை, பண்பாட்டை வளர்த்த கலைஞர்களில் ஒரு பகுதியினரைத் தெரிவு செய்து அவர்களது கலை, பண்பாட்டைக் கௌரவிப்பதன் மூலம் அவர்களது திறமை பாராட்டப்படுவதுடன் எதிர்காலத்தில் கலை பண்பாட்டை வளர்ப்போரை அதிகரிக்கச் செய்ய முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.


எங்களால் இயன்ற வகையில் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கலை பண்பாட்டு விழாவை ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறோம். மேலும் ஓரளவு கலைஞர்களை இனங்கண்டு அவர்கள் பற்றிய விபரங்களை இந்நூலில் பிரசுரித்துள்ளோம். மேலும் தகவல்களை நீங்கள் தந்துதவினால் எதிர்காலத்தில் அவற்றையும் நாம் சேர்த்துக் கொள்வோம் என வேண்டுகின்றோம்.

2011ம் ஆண்டு தைத்திங்களில் நடைபெறும் கலை பண்பாட்டு பெரு விழாவிலும் இம்மலர் வெளியீட்டிலும் உதவிய யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம், கோப்பாய் பிரதேச செயலர் திரு ம.பிரதீபன் வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, பேராசிரியர் சி. வேல்நம்பி, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆசியுரை வழங்கிய பிரமஸ்ரீ ச. உமாசுதசர்மா கோப்பாய்ஆசிரிய கலாசாலை அதிபர் வே. கா. கணபதிப்பிள்ளை, கலாசார உத்தியோகத்தர் அ.மிலாசினி கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் சமுர்த்தி உத்தியோக்தர் பி. தயேந்திரன், கிராம கீதத்தை எழுதியுதவிய திரு.செ.விசுவலிங்கம், திருமதி P. தேவரஞ்சிதம் வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் செ.கந்தசத்திய தாசன் ஆகியோருக்கும் இவ்விழாவிற்கு முன்னின்று உழைத்து வரும் சிறுப்பிட்டி கிழக்கு கிராம சேவையாளர் திரு.க.ஸ்ரீஸ்கந்தராசா, சிறுப்பிட்டி மேற்கு கிராமசேவை யாளர் திரு.சி. தயாபரன் ஆகியோருக்கும் நிதியுதவி செய்தோருக்கும் மற்றும் இம்மலர் வெளிவர உதவியோர், கலை பண்பாட்டு விழா சிறப்புற உதவியோர் நிகழ்ச்சித் தொகுப்பாளர் அ.அருந்தவநேசன், குறிப்பாக சிறுப்பிட்டி இளைஞர்கள் கலை நிகழ்ச்சிகளைத் தந்துதவிய கலைஞர்கள், மலர் விளம்பரதாரர்களுக்கும் எம்மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# சிறுப்பிட்டி கலை பண்பாட்டு மன்றம்



நிற்பவர்கள் : திரு.தி.சதீஸ்குமார் (நி.உறுப்பினர்), திரு.சி.சிவரூபன் (நி.உறுப்பினர்), திரு.வ.கிருஷ்ணகுமார் (பொருளாளர்),
இருப்பவர்கள் : கிராமசேவையாளர் சி.தயாபரன் (இணைச்செயலாளர்), வே.கா.கணபதிப்பிள்ளை (தலைவர்),
கிராம சேவையாளர் க.ஸ்ரீஸ்கந்தராசா (இணைச்செயலாளர்)



சிறுப்பிட்டி வடக்கு ஸ்ரீ விஸ்ணு துர்க்காதேவி கோவில்




சிறுப்பிட்டி மத்தி ஸ்ரீமனோன்மணி அம்மன் கோவில்




சிறுப்பிட்டி தெற்கு செல்லப்பிள்ளையார் கோவில்



சிறுப்பிட்டி மத்தி வைரவர் கோவில்




சிறுப்பிட்டி வடக்கு இலுப்பையடி முத்துமாரி அம்மன் கோவில்



சிறுப்பிட்டி தெற்கு ஸ்ரீஞானவைரவர் கோவில்



சிறுப்பிட்டி தெற்கு ஸ்ரீ பத்திரகாளி கோவில்




சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீஞானவைரவர் கோவில்




சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் கோவில்



சிறுப்பிட்டி மேற்கு பெருதலை பார்வதி பரமேஸ்வரன் கோவில்



சிறுப்பிட்டி கிழக்கு அண்ணமார் கோவில்



சிறுப்பிட்டி வடக்கு ஸ்ரீஞானவைரவர் கோவில்



சிறுப்பிட்டி கிழக்கு வீரபத்திரர் கோவில்



சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை




சிறுப்பிட்டி வடக்கு கலைவாணி சனசமூக நிலையம்

சிறுப்பிட்டி மேற்கு அ.த.க. பாடசாலை
சிறுப்பிட்டி கிழக்கு சிவபூதராலயம்
சிறுப்பிட்டி தெற்கு வைரவராலயம்
சிறுப்பிட்டி தெற்கு அம்மன் கோவில்
ஆகியவற்றின் படங்கள் பிரசுரிக்க முடியவில்லை.

ஓம் நமச்சிவாய

# சிறுப்பிட்டிக் கிராம கீதம்



வளம்பல கொண்ட வலிகாமம் கிழக்கின்
மத்தித் திலகம் வாழியவே
உளம் நிறைமக்கள் உத்தமர்
வாழும் சிறுப்பிட்டி ஊர் வாழியவே.

வயல்வெளி தோட்டங்கள்
வளம் தரு வாழை வெங்காயம்
உயர்பெறு கமுகு தென்னைகள் சூழவே
உயர்ந்தென்றும் வாழியவே

சீர்புகழ் சிறுப்பிட்டித் தாமோதரனார்
தமிழ்ப் பணி வாழியவே
பேர்பெறு மழவரின் மைந்தன்
கொடைப்பணி என்றும் வாழியவே.

ஆன்மீகம் வளர்க்கும் அருங்கோயில்
பலவும் அறத்துடன் வாழியவே
தேன்மிகு கல்வி கலைபண்பாட்டை
அளித்திடும் சாலைகள் வாழியவே.



மாதா பிதா குருதெய்வம் மலரடி
போற்றும் மக்கள் வாழியவே
கோமாதா எங்கள் குலமாதாவாம்
பசுவினம் போற்றி வாழியவே!

பண்புடை மக்கள் பரம்பரைக் கலைகள்
அன்புடன் விருந்து வாழியவே
கண் எனும் மாதர் கவினுறு கலைகள் எல்லாம்
கார் மழை வாழிய வாழியவே!
சிறுப்பிட்டிக் கிராமம் வாழிய வாழியவே!

இயற்றியவர் :
**கவிஞர் புத்தூர் விஸ்வம் செ. விசுவலிங்கம்**
முன்னாள் ஆசிரிய ஆலோசகர் – தமிழ்
சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி.





இராவ்பகதூர்

# சி.வை.தாமோதரம்பிள்ளை

## ஒரு மீள் ஆய்வு


கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

(ஆய்வாளர் கச்சுயின் பல்கலைக்கழகம், யப்பான்)


### முன்னுரை

ஈழத்துத் தமிழறிஞர்களில் சி.வை.தாமோதரம்பிள்ளை சிறப்பாகப் பேசப்படுபவர். (இனிவருமிடங்களில் இவர் சி.வை.தா எனக் குறிப்பிடப் படுவார்) குறிப்பாக யாழ்ப்பாணத்து அறிஞர்கள் வரலாற்றில், சி.வை.தா. நுனித்து ஆராயப்பட வேண்டியவர். இவரது வாழ்க்கைக்காலம் 1832 – 1900 வரையாகும். இக்காலகட்டத்திலேதான் ஆறுமுகநாவலரும் வாழ்ந்தார். (1822 – 1879) 19ஆம் நூற்றாண்டில் சமகாலத்திலே வாழ்ந்த இவ்விருவரது வரலாறும் வாழ்வியலும், பல நிலைகளில் ஒற்றுமையுடையனவாயுள்ளன. இருவரும், தமது வாழ்க்கைச் சூழலால் வாழ்க்கையின் போக்கை மாற்றிக் கொண்டவர்கள். நாவலரைப் பற்றிய குறிப்பு ஒன்று அக்காலச் சூழலை ஆராயத் தூண்டுகிறது.

> "சென்ற நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்தில் இரண்டு பெரியவர்கள் இருந்தார்கள். ஒருவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். மற்றவர் கனம் பார்சிவல் பாதிரியார். நாவலருடைய நோக்கம் சைவசமயத்தை வளர்ப்பது. பாதிரியாரின் நோக்கம் கிறிஸ்தவ சமயத்தை வளர்ப்பது. நாவலர் போலிச் சைவர்களால் மிகு கஷ்டப்பட்டார். அங்ஙனமே பாதிரியாரும் போலிக் கிறிஸ்தவர்களால் மிகு கஷ்டப்பட்டார். நாவலருடைய நோக்கமும் பாதிரியாருடைய நோக்கமும் ஒன்றற்கொன்று நேர்விரோதமானவைகளாய்த் தோற்றலாம். ஆனால் அவ்விருவரும் உண்மைச் சமயிகள் அதனால் ஒருவரோடொருவர் மோதிக் கொள்ளவில்லை. மன ஒருமைப் பாடுடையவர்களாய், அத்தியந்த நண்பர்களாய் அவ்விருவரும் வாழ்ந்து வந்தார்கள்."[1]

கிறிஸ்தவ சமயம் யாழ்ப்பாணத்திலே பரவிய போது நாவலர் அதைத் தடுத்துச் சைவசமயத்தை நிலைநாட்டப் பாடுபட்டார். நாவலருடைய இப்பணி பலரையும் கவர்ந்தது. அவ்வாறு கவரப்பட்டவர்களில் சி.வை.தா.வும் ஒருவராவார். இவரது வாழ்வியலை ஆராயும் போது இப்பண்பினைக் காண முடிகிறது. நாவலர் அடியொற்றி நாவலர் செய்த பணிகளையே சி.வை.தா.வும் மேற்கொண்டுள்ளார். எனினும் நாவலரைவிடச் சி.வை.தா. சிலநிலைகளில் தனித்துவமுடையவராய் விளங்கினார். இவருடைய தனித்துவம் இவர் வாழ்ந்த காலத்திற் சிறப்பிக்கப்படவில்லை. இவர் இறந்து பல ஆண்டுகளுக்குப் பின்பே அச்சிறப்புநிலை பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த ஆய்களிலும்

சி.வை.தா.வைப் பற்றிய தெளிவு முன்வைக்கப்படவில்லை. சி.வை.தா.வின் பிறப்புச் சமயமும் வாழ்வியற் சமயமும் வேறுபட்டமையால் அவருடைய வாழ்க்கை வரலாறே மாற்றமடைந்தது. இது பற்றிய கருத்துக்களைத் தெளிவாக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அதன் மூலமாகச் சி.வை.தா.வை எதிர்காலத்தவருக்கு ஏற்றவகையில் அறிமுகம் செய்துவைப்பதே இக்கட்டுரையின் பயனாக அமையும்.

## 1. சி.வை.தாவின் வாழ்வியலும் சமயமும் :

நாவலரைப் போல சி.வை.தா.வும் யாழ்ப்பாணத்திலே வேற்றுச்சமயமான கிறிஸ்தவ சமயம் பரவுகின்ற காலத்திலே பிறந்தவர். நாவலர் பிறக்கும்போதே சைவராகப் பிறந்தார். நாவலரது பெற்றோர்களாகிய கந்தப்பிள்ளையும் சிவகாமி அம்மையும் சைவராக இருந்தமையால் நாவலர் பிறப்புச் சமயம் சைவமானது. வாழ்வுச் சமயமும் அதுவே. சி.வை.தா.வின் பெற்றோர்களது நிலை வேறு பட்டது. சி.வை.தா.வின் தந்தை வைரவநாதரவர்கள் யாழ்ப்பாணத்திற் சிறுப் பிட்டிக் குருநாதரவர்களின் புதல்வராவார். குருநாதரவர்களின் குடும்பம் சைவக்குடும்பமாக இருந்தபோதும் அதிலே வந்து பிறந்த வைரவநாதரவர்கள் வட்டுக்கோட்டைச் செமினரியிலே கல்வி பயின்றபோது கிறிஸ்தவராக சமயம் மாறினார். இது பற்றிய மேலதிக விளக்கத்தைப் பின்வரும் செய்தி காட்டுகிறது.

> "வைரவநாதரவர்கள் வட்டுக்கோட்டை செமினரியிலே பயின்றபோது 1825ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். அமெரிக்க இந்தியரிடையே கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முற்பட்டுப் பிரபல்யம் அடைந்த சைரஸ் கிங்ஸ்பரி பாதிரியாரின் பெயர் வைரவநாதர் அவர்களுக்கு வழங்கப்பெற்றது. சைரஸ்கிங்ஸ்பரி வைரவ நாதரவர்கள் பண்டைத்தரிப்பிலிருந்து அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தலைமையாசிரியராக உயர்ந்து ஓய்வுபெற்று, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் கணிதப் பேராசிரியராகத் திகழ்ந்தவரும் தமது புத்திரருமாகிய எட்வேட் அப்புக்குட்டி கிங்ஸ்பரியவர்களுடன் வாழ்ந்து மறைந்தவர். கிங்ஸ்பரி அமெரிக்க மிஷன் பிரசங்கியாகவும் பணி புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது மனைவியார் பெருந்தேவியார் உடுவில் மகளிர் கலாசாலையிற் பயின்றபோது 1830ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். இவர் மேரிடேற்றன் (Mary Dayton) என்னும் கிறிஸ்தவப் பெயரைப் பெற்றார். இவர்களிருவரையும் தம்பதி களாக்கிய பெருமை அமெரிக்கன் மிஷனைச் சார்ந்தவர் களுக்குண்டு. 1832ஆம் ஆண்டு பிறந்த இவர்களுடைய மூத்த புதல்வர் சாள்ஸ் வின்ஸ்லோ தாமோதரம் என்பவருக்கு 1833ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஞானஸ்நானம் அளிக்கப்பெற்றது."[2]

இச்செய்தி சி.வை.தாவின் பிறப்புச் சமய நிலையைத் தெளிவாக விளக்கி நிற்கிறது. அக்காலத்தில் உயர்கல்வி பெறுவதற்கு கிறிஸ்தவராக மாற வேண்டியிருந்துள்ளது. வைரவநாதரின் மதமாற்றம் இதற்குச் சான்றாயுள்ளது. அவர் சைவ சமயத்தைவிட்டு கிறிஸ்தவ சமயத்தைத் தழுவுவதற்கு வேறு எந்தக் காரணமும் இருந்ததாகத் தெரியவில்லை. வட்டுக்கோட்டை செமினரியில் சேர்ந்தபோது அவர் சைவசமயத்தவராகவே இருந்துள்ளார். செமினரியிலே சேர்ந்து கல்வி கற்பதற்கு வேண்டப்பட்ட அடிப்படைத் தகைமைகளை செமினரி அறிக்கை (1841) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.[3]

1. புதிய ஏற்பாட்டை ஆங்கிலத்தில் விளக்கத்துடன் வாசிக்கக் கூடிய ஆற்றல்.
2. "முதற் பாடங்கள்" என்ற நூல்களில் நடாத்தப்படும் பரீட்சையிற் சித்தி.
3. ஆங்கிலத்தில் கரும்பலகையிலாவது தெளிவாக எழுதக்கூடிய திறமை.
4. பேனாத்தடியால் நன்றாக எழுதக்கூடிய ஆற்றல்.
5. புதிய ஏற்பாட்டைத் தமிழில் சிரமமின்றியும் விளக்கமாகவும் வாசிக்கும் திறன்.
6. பின்வரும் நூல்களில் நல்லறிவு – ஞானப்பால், ஞான தீபிகை, வேதப்பொழிப்பு.
7. தமிழ்க்கணித வாய்ப்பாட்டை அல்லது ஆங்கில கணித வாய்ப்பாட்டின் அடிப்படை விதிகளை அறிந்திருத்தல்.
8. பின்வரும் நூல்களில் நல்லறிவு – ஔவையார் முதுமொழி, இலக்கணச் சுருக்கம், உரிச்சொல் நிகண்டு.

மேற்படி தகைமைகளை நோக்கும்போது வைரவநாதபிள்ளை செமினரியில் சேரும்போது கிறிஸ்தவராக மாறவேண்டிய தேவை இருக்கவில்லையென்பது புலனாகின்றது. ஆனால் அவர் 1825ஆம் ஆண்டு கிறிஸ்தவராக மாதம் மாறியுள்ளார். அந்த மதமாற்றமே சி.வை.தாவைக் கிறிஸ்தவராகப் பிறப்பித்தது. எனினும் சி.வை.தா கிறிஸ்தவரல்லர் எனக் கருத்துத் தெரிவிப்போரும் உள்ர்.4 இக் கருத்துகள் சி.வை.தா. கிறிஸ்தவராகப் பிறக்கவில்லை எனக் கூறுவதாக இல்லை. சபாபதிநாவலர் போன்ற சைவஅறிஞர்கள் சி.வை.தாவைப் பற்றி இழித்துரைப்பதற்கும் சி.வை.தாவின் பிறப்புச் சமயமே காரணமாயிருந்தது. தமது நாட்டவரால் இழித்துரைக்கப்படும் நிலையில் சி.வை.தா.வும் தமது பிறப்புச் சமயம் பற்றிய மீளாய்வை மேற்கொண்டார். தமது தாயும் தந்தையும் சைவசமயத்தைவிட்டு கிறிஸ்தவ சமயத்தராக மாறியதை எண்ணிப்பார்த்தார். சமூகத்திலே பொருள்தேட்டம், தொழில்வாய்ப்பு, ஆங்கில மரபான கல்வி என்பவற்றிற்காகத் தமது சமயத்தைத் துறந்த பெற்றோரின் செயலை அவர் எண்ணிப் பார்த்தார். தன் சமயத்தைச் சைவமெனத் துணிந்து சைவரானார். சி.வை.தா.வின் முடிவுக்கு நாவலர் பணியும் காரணமாயிற்று. நாவலரது சமயப்பணி யாழ்ப்பாணத்து மக்களின் மதமாற்றத்தைத் தடுத்தது. நாவலரின் ஆளுமை பார்சிவல் துரையையே அடிபணிய வைத்தமையைப் பின்வரும் செய்தி காட்டுகிறது.

"பார்சிவல் துரைக்குப் பண்டிதராகும்போது நாவலர் தாம் ஒரு காலத்தும் விபூதியை அழிக்கமாட்டாரென்றும் உத்தூளனம், திரிபுண்டரம் ஆகிய இருவகையாலும் விபூதி தரித்துக் கொண்டுதான் வருவாரென்றும், தாம் கிறிஸ்தவமத கண்டனம் செய்வதைப் பற்றிக் குறை சொல்லக்கூடாதென்றும் இவை முதலாகிய நிபந்தனையெல்லாம் கேட்டுக்கொண்டார். பார்சிவல் துரையும் தமக்குக் கீழேயுள்ள கிறிஸ்தவர் பலர் பஞ்சாட்சர (சம்பளம்)க் கிறிஸ்தவர்களென்றும் சைவருள்ளும் இவர் ஒருவரே சரியானவரென்றும் நிச்சயமாக அறிந்து கொண்டபடியால் தமக்கு நாவலர் போன்ற வேறு பண்டிதர் அகப்படாமையாலும் அவருடைய கேள்விகளுக்கெல்லாம் உடன்பட்டார்."[5]

நாவலர் பாதிரிமாரின் போதனைகளால் மனம் திரிந்து கிறிஸ்தவ சமயத்திற்கு மாற விரும்பிய சைவர்களை மனந்தெளிவித்து கிறிஸ்தவராவதிலிருந்து தடுத்துள்ளார். மு. தில்லைநாதபிள்ளை, க. சின்னப்பிள்ளையென்னும் இருவர் பாதிரிமாருக்கு மதம் மாறுவதாக வாக்குக் கொடுத்துவிட்டுப் பின்னர் நாவலர் அறிவுரையால் மதமாற்றத்தைக் கைவிட்டவர்கள். நாவலரது ஆற்றல், அறிவுத்திறன், சமய நம்பிக்கை என்பன சி.வை.தாவின் மனத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. தன் பிறப்புச் சமயம் தமது வாழ்வுக்கு ஒவ்வாதது என முடிவு செய்து சைவசமயத்தைத் தழுவினார்.

"ஆரம்பத்தில் கிறிஸ்தவ மதத்தை மேற்கொண்டிருந்த பிள்ளையவர்கள் பின்னர் சைவத்தை நாடி இறுகிய பக்தியுடையவராகத் தமது அந்திம காலம் வரையும் சிவபூசை மேற்கொண்டதும் நாவலர் பெருமான் போதனையால் என்பது உணரப்படும்."[6]

என்னும் கூற்றும் இதனை உணர்த்தி நிற்கிறது. யாழ்ப்பாணத்தில் அக்காலச் சூழலில் கிறிஸ்தவப் பாதிரிகளால் பரப்பப்பட்ட கிறிஸ்தவ சமயத்தை பலர் தழுவியதால் அவர்கள் சந்ததியாரும் அறிவுபூர்வமாக அன்றி பிறப்புநிலையால் கிறிஸ்தவராக நேரிட்டது. இதனால் கிறிஸ்தவ சமயம் வேகமாகப் பரவலாயிற்று. அக்காலத்தில் நாவலரது பிரசங்கங்களும், கட்டுரைகளும், கண்டனங்களும் கல்வியறிவற்ற சைவசமயத்தவரை கிறிஸ்தவமதத்தில் சேராமல் தடுத்தன. இச் சூழல் சி.வை.தா.வையும் சைவ மதம் மாறச்செய்தது. சி.வை.தா. கிறிஸ்தவ மதநம்பிக்கையைத் தனது அறிவு நிலையால் தெளிந்து கைவிட்டார். இதனை,

"மனுவினைச் சிறப்பிப்பது யுக்தி. யுக்திக்காதாரம் பிரமாணுனாபவம் முதலியன. இத்தன்மைய பிரமாணு னாபவங்களிடையே எச் சமயம் மெய்ச்சமயமென்று ஒரு மனுஷன் காண்கிறானோ அச்சமயத்திற் புகுதலேயவற்குத் தகும்.

அதுவே கடமை. அவ்வாறு மெய்யெனக் கண்ட சமயத்திற் புகானேல் அவன் மனுஷனல்லன்."[7]

என்னும் சி.வை.தாவின் கூற்று தனது சமயம் எது என்பதை அறிவுநிலை கொண்டு முடிவுசெய்ய வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையென்பதையும் சுட்டி நிற்கிறது. பிறருடைய போதனையால் தனக்குரிய மதத்தைத் தேர்வு செய்வதை சி.வை.தா விரும்பவில்லை. ஏறக்குறைய 20 ஆண்டுகளாக நன்கு எண்ணிப்பார்த்து தன் சமயம் சைவசமயமே என முடிவு செய்தார். இதனை அவர் வருமாறு கூறியுள்ளார்.

> உண்மையைக் கடைப்பிடித்துய்தல் வேண்டுமென்ற பேராவலால் ஏறக்குறைய 20 வருஷமாக ஒரு பட்சத் துணிவு சிறிதுமில்லாது சைவவேதாந்த சித்தாந்த, ஸ்மார்த்த, பௌத்த, அருகாதி, இந்து சமயங்களையும், கிரேக்க, லுத்தேரிய, ரோமானிய, புரொத்தெஸ்தான கிறிஸ்தவ சமயங்களையும் அடியேன் ஆராய்ந்து சைவமே இவற்றுள் எல்லாம் சிறந்ததெனக் கொண்டனன்."[8]

சி.வை.தாவின் இத்தகைய பண்பு சமயம் பரப்பும் பணியிலீடுபட்ட கிறிஸ்தவர்களுக்குச் சற்று இடைஞ்சலாக இருந்தது. அதனால் "சமய ஆராய்ச்சியும் நேர்மையும்" என்னும் துண்டுப்பிரசுரத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் (1875 – 1947) வருணசிந்தாமணியென்னும் பகுதியில்

> "தமது பெயருக்கு சி.வை. அல்லது C.W என்பதற்குப் பொருளென்னை எனக் சைவன் வினவில் சிற்றூர் வைரவநாதபிள்ளையென்றும் ஆங்கிலேயர் வினவில் Charles Winslow என்றும் முன்னவருக்குத் தாம் சைவராகவும் பின்னவருக்குத் தாம் கிறிஸ்தவராகவும் கூறுவர்."[9]

என்று குறிப்பிட்டுள்ளார். சைவருள் மிகமேலானவர்களாகக் கணிக்கப்படுவோரிடத்தும் நேர்மைக்குறைவு அதிகமாய் உண்டென்பதற்கு இலக்கியமாகவே இதை எடுத்துச் சொல்கிறோம். என விளக்கமும் தந்தள்ளார். ஞானப்பிரகாசர் 1875ஆம் ஆண்டிலே பிறந்து வைத்திலிங்கம்பிள்ளையென்னும் நாமம் பூண்டு 1878ல் கத்தோலிக்க மதத்தவராக மாற்றப்பட்டு ஞானப்பிரகாசர் எனப் பெயர் பெற்றார். அவர் இவ்வாறு சி.வை.தா.வைப் பற்றிக் கூறுவதற்கு முக்கிய காரணம் சி.வை.தா கிறிஸ்தவ சமயத்தைக் கைவிட்டமை பற்றிய தெளிவின்மையே எனலாம். சமயம் என்பது வாழ்வியலாக அன்றி கருத்துநிலையாகவே கிறிஸ்தவர்களால் பேணப்பட்டது. ஒருவரின் பெயரிலே அவருடைய சமயம் தங்கியிருக்கும் நிலை கிறிஸ்தவ சமயத்தில் ஒரு முக்கியமான அம்சமாக இருந்தது. கிறிஸ்தவர்களாக மாறிய சைவர் தமக்கு ஒரு கிறிஸ்தவப் பெயரையும் பெற்றனர். அதனால் அவர்களுடைய முன்னைய பெயர் சைவப் பெயரெனக் கருதப்பட்டது. புதிய கிறிஸ்தவப்பெயரை அவர்

பயன்படுத்தினால்தான் தன்னை ஒரு கிறிஸ்தவரென இனங்காட்டிக் கொள்ளவும் முடிந்தது. இன்னும் ஒருவர் பெயரை இன்னொருவர் வினவும் போது கிறிஸ்தவப் பெயரையா அல்லது தமிழ்ப்பெயரையா சொல்ல வேண்டும் என்பதிலும் இடைஞ்சல் இருந்தது. கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியவர் கிறிஸ்தவப் பெயரைப் பயன்படுத்த வேண்டிய தேவையும் இருந்தது. சமயப் பதிவுப் பெயர் என்ற நிலையில் பலர் கிறிஸ்தவப் பெயரைப் பயன்படுத்தத் தொடங்கிய போது தமிழ்ப்பெயர்கள் வழக்கொழியும் நிலையும் ஏற்பட்டது. சி.வை.தா.வைப் பொறுத்தவரையில் வாழ்க்கைச் சமயத்தைச் சைவமெனக் கொண்டபோது கிறிஸ்தவப்பெயரை முற்றுமாகப் பயன்படுத்தாமல் விட்டுவிடமுடிந்தது.

## 1.1 சி.வை.தா.வின் வாழ்க்கைச்சமயம் :

சி.வை.தா.வைப் பொறுத்தவரையில் கல்விக்காக கிறிஸ்தவ சமயத்தைச் சாரவேண்டிய தேவை இருக்கவில்லை. பிறக்கும்போதே கிறிஸ்தவராகப் பிறந்தமையால் இந்த வாய்ப்பு அவருக்கு இருந்தது. ஆனால் சி.வை.தா. கிறிஸ்தவ சமயத்தைக் கைவிட்டமை அவர் வாழ்க்கையிலே பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. தாய் தந்தையரால் சைவசமயத்தைக் கைவிட்டுச் சிறந்த வாழ்க்கைச் சமயமெனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த புதிய சமயமான கிறிஸ்தவத்தைச் சி.வை.தா. விட்டு விலகினார். இது ஒரு மரபு மீறிய செயலாகக் கிறிஸ்தவர்களால் கருதப்பட்டது. 25 ஆண்டுகள் வரை கடைப்பிடித்த சமயத்தைச் சி.வை.தா. வெறுத்து ஒதுக்குவதற்கு அவருடைய கிறிஸ்தவச் சூழலிலே காரணமாயிருந்தது. ஏறக்குறைய அக்காலத்தில் 1857ல் சென்னைப் பல்கலைக்கழகம் முதல்முதல் நடத்திய B.A. பரீட்சையில் சித்தியடைந்த இருவர் செமினரியின் பழைய மாணவர்களாவர். ஒருவர் சி.வை.தா மற்றவர் கறல் விசுவநாதபிள்ளை. இச்சந்தர்ப்பத்தில் சி.வை.தாவின் மதமாற்றத்திற்கு உயர்கல்விப் புலமையும் துணைசெய்ததை அனுமானிக்க முடிகின்றது. செமினரியின் தலைசிறந்த மாணவர்களில் ஒருவராகச் சி.வை.தா. பிற்காலத்தில் மதிக்கப்படுவதற்கு இப்பல்கலைக்கழகப் பட்டமும் ஒரு காரணமாயிருந்தது. ஆனால் சி.வை.தா தன்னுடைய சமயத்தை மாற்றிக் கொண்டமைக்கு நாவலரது தமிழ்ப்பணியும் முக்கிய காரணமாக இருந்துள்ளது. நாவலர் சைவமும் தமிழும் தமது இரண்டு கண்களெனக் கொண்டு பணியாற்றியவர். கல்விப் புலமையால் தமிழ்ப் பணியிலே ஆர்வம் கொண்ட சி.வை.தா. நாவலரைப் போல தமிழ்ப் பணி செய்ய விரும்பினார். அக்காலத்தில் புதிதாக அறிமுகமாகிய ஆங்கிலமொழி கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் சிறந்த ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டது. தமிழ் மக்களின் தமிழ் மொழியறிவு ஆங்கிலமொழியின் செல்வாக்கால் குறைவுபடத் தொடங்கிற்று. மரபான தமிழ்க்கல்வி அதுவரையில் ஏட்டுச்சுவடிகளால் பயிற்றப்பட்டது. ஏட்டுச் சுவடிகள் எல்லோருடைய கையிலும் இல்லாததால் பயிற்றுதல் நிலையிலும் இடர்கள் ஏற்பட்டன. கிறிஸ்தவப் பாதிரிமாரின் அச்சுக்கப் பணியால் பல ஆங்கில நூல்கள் வெளிவந்தன. புதிய பாடநூல்கள் கல்விப் பயிற்சிக்காக எழுதப்பட்டன. இந்நிலையில் தமிழ் நூற்கல்வியை ஆறுமுக நாவலர் புனரமைப்புச் செய்ய முற்பட்டார். பயிற்சி நிலைக்கேற்ற நூல்களை

ஆக்கினார். பாதிரிமார்களும் தமிழ்மொழியின் வளத்தை நன்குணர்ந்து தமிழ் மக்களுக்கு ஆங்கிலமொழிக் கல்வியிலே மோகம் ஏற்படப் பல முயற்சிகளை மேற்கொண்டனர். இந்த முயற்சிகள் தமிழ் மொழியை மக்கள் கைவிடும் நிலைக்கு அழித்துச் செல்வனவாக இருந்ததை சி.வை.தா. நன்குணர்ந்தார். தமிழ்மொழியறிவு பேணப்படப் பழந்தமிழ் நூல்களை ஏட்டுவடிவிலிருந்து அச்சுவாகனம் ஏற்ற வேண்டும் எனத் துணிந்தார். மேலைத்தேசக் கல்விமுறைக்கு முற்றிலும் வேறுபட்டிருந்த ஒரு பயில்நிலையைத் தமிழ்மொழிக்கு ஏற்படுத்தத் திட்டமிட்டார். தமிழ்மொழி இலக்கண, இலக்கியங்களை உலகறியச் செய்ய இதுவே நல்ல சமயம் என எண்ணித் தொழிற்படலானார். மேலை நாட்டிலிருந்து சமயம் பரப்புவதற்காக வந்த பாதிரிமார் தமிழ்நூல்களின் மூலமாக அதன் பழமையையும் வளத்தையும் அறியச் செய்ய வேண்டுமென எண்ணிப் பணியாற்றத் தொடங்கினார்.

இத்தகைய பணியைச் செய்வதற்குத் தன்னுடைய பிறப்புச் சமயம் இடையூறாக இருக்கும் என்பதை நன்கு எண்ணித் துணிந்து கிறிஸ்தவ சமயத்தைக் கைவிட்டு சைவசமயத்தைத் தனது வாழ்க்கைச் சமயம் ஆக்கினார். தமிழ்மொழியால் அறியப்பட்ட சைவசமயத்தை ஆங்கிலக்கல்வியால் கைவிட்ட பெற்றோரின் செயற்பாடு சி.வை.தா. உள்ளத்திலே ஏற்படுத்தியிருந்த சிந்தனையின் தெளிவே அவர் சைவத்தைச் சாரத்துணை நின்றது. தன்னுடைய சமயமாற்றம் தன்னுடைய தலைமுறைகளிலும் செறியும் என நம்பினார். ஆனால் சி.வை.தாவின் புதல்வர் கிறிஸ்தவராக மாறியது. சி.வை.தா.வுக்கு மிகுந்த கவலைதரும் செயலாக இருந்தது. 1893ஆம் ஆண்டு சி.தா.அழகசுந்தரம் கிறிஸ்தவராக மாறியபோது கடிதமூலம் தந்தைக்குச் சைவசமயத்தில் தமக்குத் திருப்தி இல்லையென்றும் அதன் காரணமாகத் தாம் கிறிஸ்தவ மதத்தில் சேர நிச்சயித்திருப்பதாகவும் அறிவித்துவிட்டுத் தந்தையைவிட்டகன்றார். இதனால் தந்தை மகன் தொடர்பு அருகியது. சி.வை.தா. தனது மகன் சமயம் மாறியதை ஏற்றுக்கொள்ளாது அவனைப் புறக்கணித்தது தகாது என்ற கருத்தும் அக்காலத்தில் நிலவியது. சி.வை.தா.வைப் பொறுத்தவரையில் தன்னுடைய வாழ்க்கைச் சமயத்தை அறிவுநிலையிலே ஏற்றதாகக் கருதினார். கிறிஸ்தவ சமயத்தை அவர் தமிழ்மொழியையும் பண்பாட்டையும் சிதைக்கும் சமயமாகவே கண்டார். எனவே தனது வாழ்க்கைச் சமயத்தை நடைமுறை யாக்குவதற்கு யாழ்ப்பாணம் ஏற்ற இடமல்ல என்று முடிவு செய்து தென்னகத்திற்குப் புலம்பெயர்ந்தார்.

## 2. தென்னக வாழ்க்கையும் பதிப்புப்பணியும் :

சி.வை.தா. தென்னகத்திலே சென்று வாழ்வதற்கு முக்கியமான காரணம் அவர் சைவராக மாறியமையே. யாழ்ப்பாணத்திலே கிறிஸ்தவராகப் பிறந்து அதைக் கவிட்டு சைவராகியபின் சி.வை.தா. தன்னுடைய வாழ்வுச் சூழலை மாற்றியமைத்துக் கொண்டார். அவர் சைவத்தை விரும்பி கிறிஸ்தவ சமய நடைமுறைகளைக் கைவிட்டு சைவசமய நடைமுறைகளைக் கடைப்பிடிப்ப தற்குத் தென்னகச் சூழல் இசைவு தரும் என எண்ணினார். தந்தையாரிடமும் முத்துக்குமாரக்கவிராயரிடத்தும் பெற்ற தமிழறிவைக் கொண்டு தமிழ்ப்பணி

செய்ய தென்னகம் துணை செய்யும் என்ற அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை. நாவலரைப் போலத் தனது தமிழ்மொழி தொடர்பான பணிகளை அங்கே தொடங்கினார். நாவலரது தென்னகத்துச் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தவரான சி.வை.தாவையும் சென்னையில் தங்குவதற்கு இடமளித்தது. சென்னைப் பல்கலைக்கழகத்துப் பட்டமும் உறுதுணையாக நின்றது. மேலும் சி.வை.தா.நாவலருடன் நட்புக் கொண்டிருந்த பார்சிவல்துரையின் அறிமுகத்தால் தினவர்த்தமானி பத்திரிகையின் ஆசிரியராகப் பதவி பெற்றார். இப்பத்திரிகையில் சி.வை.தா. பணி தொடர்புறுத்தப்பட்டபோது அவர் தென்னகத்தவரால் அறியப்பட்ட தமிழறிஞரானார். தினவர்த்தமானி பற்றிய செய்தி ஒன்று இதற்குச் சான்றாகவுள்ளது.

> *"இது வாரப் பத்திரிகை வியாழக்கிழமை தோறும் வெளி வந்தது. பெர்சிவல் பாதிரியார் (Rev.P.Percivel) இதைத் தொடங்கி இதன் ஆசிரியராக இருந்தார். தினசரிப் பத்திரிகையின் பெரிய அளவில் அச்சிடப்பட்டது. செய்திகளுடன் இலக்கியம் விஞ்ஞானம் முதலிய கட்டுரைகளும் வெளிவந்தன. அரசாங்கத்தார் மாதம் 200 ரூபாய் இப்பத்திரிகைக்கு நன்கொடையளித்தனர். பெர்சிவல் ஐயர் விலகிக் கொண்ட பிறகு இந்நன்கொடை நிறுத்தப்பட்டது. அவருக்குப் பிறகு ஏட்டுச்சுவடியிலிருந்து பல நூல்களைப் பதிப்பித்தவரான சி.வை.தாமோதரம்பிள்ளையவர்கள் இதனாசிரியராகச் சில காலம் இருந்தார்."*[10]

இப்பத்திரிகையில் சி.வை.தா.வால் எழுதப்பட்ட கடிதங்கள் பல முக்கிய விடயங்களைக் குறித்தனவாகவும், பொதுசன நலங்கருதியனவாகவும், மொழிநடையிற் சிறந்தனவாகவும், அணியலங்காரம் பொருந்தியனவாகவும் விளங்கினவென்பது சி.வை. தா.விடமிருந்து தமக்குக் கிடைத்த கடிதங்களாற் புலப்பட்டதாக சி.வை.தா.வின் சரித்திரத்தை எழுதியவரான இராஜரத்தினம்பிள்ளை கூறுகிறார்.[11] இப்பத்திரிகைப் பணி சி.வை.தா.வின் பெயரைப் பலரறிய வைத்தது. இக்காலத்தில் அரசாங்க உத்தியோகத்தர் பலருக்கு சி.வை.தா. தமிழ் கற்பித்து வந்தார். இதனாலவர் சென்னை ராஜதானிக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகினார். இது சி.வை.தா.வைத் தமிழாய்விற் புலன்செலுத்த வைத்தது. பழந்தமிழ் நூல்களைத் தேடிச்செல்ல வைத்தது. பதிப்புப் பணியிலே ஈடுபடச் செய்தது.

சி.வை.தா.வின் பதிப்புப் பணிக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் நாவலரே. சமயத்தைப் பரப்புவதற்காக கிறிஸ்தவர் அச்சகங்களை நிறுவி தமது சமயக் கொள்கைகளை உரைநடை நூல்களாக வெளியிட்டனர். மடாலயம் போன்ற சைவ நிறுவனங்கள் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. எனவே நாவலர் சைவ சமயத்தை நிலைநாட்டத் தனிமனிதனாக நின்று செயற்பட வேண்டியிருந்தது. நாவலருடைய இத்தனித்துவம் சி.வை.தா.வையும் கவர்ந்தது. கிறிஸ்தவச் சூழலில் தமிழ்ப்பணி செய்வது

கடினம் என்பதை நாவலரது அனுபவம் சி.வை.தா.வுக்கு உணர்த்திற்று. எனவே சைவச் சூழலிலே பதிப்புப் பணியைத் தொடங்கினார். யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவச் சூழல் பதிப்புப் பணிசெய்ய சி.வை.தா.வுக்கு வழிகாட்டிய போதும் அவர் அச்சூழல் தமிழ்ப் பணியைத் தொடர்வதற்குப் பொருத்தமற்றது எனக் கண்டு விலகி நின்றார். அவரது இந்த நல்ல முடிவு பதிப்புலகத்தில் ஒருவராக அவர் புகழ்பெற வழி வகுத்தது.

எனினும் சி.வை.தாவின் தமிழ்த்தொண்டு இலக்கிய ஆய்வாளர் களிடையே மறைக்கப்பட்ட ஒரு நிலையைக் காண முடிகிறது. 18ஆம் நூற்றாண்டின் இடை ப பகுதியில் சாமிநாததேசிகர், சிவஞான சுவாமிகள் காலம் வரை ஒரு நூற்றாண்டு காலமாகச் சங்க நூல்களையும், பௌத்த சமண காவியங்களையும் கற்கக் கூடாது என்ற வழக்கம் நிலவியது. இவர்கள் மாணவர்களும் இக்கொள்கையை ஆதரித்தனர். சைவ மடங்களும் இக்கொள்கையை ஆதரித்து சங்க நூல்களையும், மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களை மாணவர்க்குக் கற்பித்தலை நிறுத்தி இருந்தன. 19ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த தமிழாசிரியராகப் புகழ் பெற்றிருந்த மகாவித்து வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை கூட இந்நூல்களைத் தமது மாணவர்களுக்குக் கற்பியாதிருந்தார். இத்தகைய ஒரு சூழலில் சி.வை.தா. தமது இருபதாவது வயதில் நீதி நெறி விளக்கம் என்னும் நூலை அச்சிட்டு வெளியிட்ட அனுபவத்தையும் கொண்டு தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சியில் இறங்கினார். நாவலரது நூற்பதிப்புப்பணி சி.வை.தா.வுக்கு ஊக்கத்தைக் கொடுத்தது. நாவலருடைய நூற்பதிப்புக்குச் சி.வை.தா. தன்னாலான உதவி களைச் செய்து வந்தவிடத்து நாவலர் மறைந்தது. சி.வை.தா.வுக்கு தாம் அப் பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற மனவுறுதியைத் தந்தது. இதனால் அப்பணியையே தனது எஞ்சிய வாழ்நாட் பணியாக்கிக் கொண்டார்.

இக்கால கட்டத்திலே பதிப்பிக்கப்பட்ட நூல்கள் அநேகமாகப் பழந்தமிழ் இலக்கியங்களாகவே காணப்படுகின்றன. ஆறுமுகநாவலர் சைவசமய நூல்களோடு குறள், பாரதம் என்பனவற்றைப் பதிப்பித்ததோடு நின்றுவிட்டார். வித்துவான் தாண்டவராய முதலியார் திவாகரத்தையும் பள்ளி மாணவர்களின் பயிற்சிக்கேற்ற வசன நூல்களையும் அச்சிட்டார். மழவை மகாலிங்கஐயர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியருடைய உரையுடன் பதிப்பித்தார். களத்தூர் வேதகிரி முதலியார் நாலடி, நைடதம் போன்ற நூல்களை வெளியிட்டார். திருத்தணிகை விசாகப் பெருமாளையங்கார் முதலியோர் குறளுக்குத் தெளிபொருள், பிரபுலிங்கலீலை, சூடாமணி நிகண்டு என்பவற்றை வெளியிட்டனர். திருவேங்கட முதலியார், இராஜ கோபால பிள்ளை முதலியவர்கள் இராமாயணம், நாவலடியார் போன்றவற்றைப் பதிப் பிப்பதில் ஈடுபட்டிருந்தனர். உ.வே.சாமிநாதையர் அப்போது தான் சிந்தா மணிப் பதிப்பு முயற்சியிலே போராடிக் கொண்டிருந்தார். சி.வை.தா.வும் தன்னந் தனியாக பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சியில் இறங்கினார். ஏட்டுச் சுவடிகளில் இருந்த இலக்கண இலக்கியங்களை அவர் தென்னகத்து

மரபு நிலையிலே கற்றிருக்கவில்லை. சுவடிகளைப் பரிசோதிப்பதில் தேர்ச்சி பெற்ற தென்னகத்தவர் உதவியைப் பெறுவதும் கடினமாக இருந்தது. இதனாலே அவர் தனியாக ஏடுகளைத் தேடிப் பரிசோதித்துப் பதிப்பிக்க வேண்டியிருந்தது.

சி.வை.தா.பதிப்பித்த நூல்களில் நீதிநெறி விளக்கம் மட்டும் அவர் யாழ்ப்பாணம் சேட்ச் மிஷன் வித்தியாசாலை உபாத்தியாயராய் இருந்த காலத்தில் 1854ஆம் ஆண்டு மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் அச்சுக்கூடத்தில் உரையுடன் பதிப்பிக்கப்பட்டது. அப்போது அவர் கிறிஸ்தவராக இருந்தமையால் அவரது கிறிஸ்தவப் பெயராகிய C.L.W. Kingebury என்னும் பெயர் முகப்பிலிடம் பெற்றுள்ளது. பின்னர் அவர் பதிப்பித்த தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம் (1868), வீரசோழியம் (1881), தணிகைப்புராணம், இறையனாரகப் பொருள் (1883) தொல்காப்பியம் பொருளதிகாரம் (1885), கலித்தொகை (1887) நூல்கள் யாவும் தென்னகத்திலே பதிக்கப்பட்டவையாகும்.

சி.வை.தா.வின் நூற்பதிப்பு தென்னகத்தவரால் அத்துணை வரவேற்கப்பட வில்லையென்றே கூறலாம். இவருடைய பதிப்புகளில் கலித்தொகைப் பதிப்பு சிறப்பானது. எனினும் சங்க இலக்கியப் பயிற்சியைத் தென்னகத்து மடங்கள் நிறுத்தியிருந்த மரபுநிலையில் சி.வை.தா.கலித்தொகையை நூல் வடிவில் கொணர முயற்சித்தமை மடாலயங்களால் வரவேற்கப்படவில்லை. முக்கியமாக வேறுபட்ட பிரதிகளைப் பெறுவதில் பெரும் இடர் ஏற்பட்டது. இதனை சி.வை.தா.தனது பதிப்புரையிலே குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவச் சூழலில் சைவநூல்களைப் பதிப்பது கடினம் என்று எண்ணியே நாவலர் தென்னகத்தில் அப்பணியைச் செய்தார். இன்னும் நாவலர் தமிழ்நாடு எங்கும் சைவப்பிரசங்கம் செய்து, சமய நூல்களையும், கருவி நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டு அங்குள்ள மடாதிபதிகளாலும், பிரபுக்களாலும், வித்து வான்களாலும் பாராட்டப்பட்டார். ஆனால் சி.வை.தா.வை. தமிழ் நாட்டவர் சற்று ஒதுக்கியே வைத்துள்ளனர். உ.வே.சாமிநாதையர் போன்ற பதிப்புப் பணியில் ஈடுபட்டவர்கள் சி.வை.தா.வைப் பற்றிக் குறிப்பிடும் செய்திகள் இதனை நன்று புலப்படுத்துகின்றன. உ.வே.சாமிநாதையர் எழுதிய எண் சரித்திரம் என்னும் நூலில் சி.வை.தா.வுக்குக் களங்கம் ஏற்படுத்தக் கூடிய செய்திகள் காணப்படுகின்றன.[12]

சி.வை.தா.தாமே பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். கட்டளைக் கலித்துறை, சைவமகத்துவம், ஆறாம் வாசகபுத்தகம், ஏழாம் வாசகபுத்தகம், நட்சத்திரமாலை, வசனசூளாமணி போன்ற நூல்களை எழுதியுள்ளார். சைவமகத்துவம் என்னும் நூல் கத்தோலிக்க பாதுகாவலன் ஆசிரியராக இருந்த அருளப்பமுதலியரால் கண்டனம் செய்யப்பட்டது. அக்கண்டனத்துக்கு உரிய மறுப்புரைகளை வல்லை.சு.வைத்திலிங்கம்பிள்ளை, சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர், சுன்னாகம் பூ.முருகேசப்பண்டிதர் முதலியோர் எழுதினர். இலங்கை நேசன், சைவ உதயபானு என்னும் பத்திரிகைகள். சி.வை.தா.வுக்கு எதிராக எழுந்த கண்டனங்களை மறுத்தெழுத உதவின. சைவ மகத்துவத்தை ஆதரித்துச் சைவமகத்துவ பாதுகாவம், இருண்மதிச்சுடர், சைவமகத்துவ பாசவிளக்க மறுப்பு, சைவ மகத்துவதிக்காரநிக்கிரகம், சைவமகத்துவதிக்காரமகத்துவம்

போன்ற நூல்களெழுந்தன. இந்நூல்களை எதிர்த்து சைவமகத்துவதிக்காரம், சைவமகத்துவதிக்கார நிக்கிரக எதிரேற்று, சைவ மகத்துவதிமிரபானு முதலிய நூல்கள் தோன்றின. இவ்வாறு பல கண்டனங்களைச் சி.வை.தா.பெறுவதற்கு முக்கிய காரணம் நூற் பதிப்பின் மூலம் நாவலரைப் போல சைவசமயத்தைப் பாதுகாக்க முனைந்தமையே. பிறப்பினால் கிறிஸ்தவராக இருந்த சி.வை.தா.வின் இத்தகைய பதிப்புப் பணியை கிறிஸ்தவர் வளரவிடாது தடுக்க முயன்றனர். சி.வை. தா.யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தால் இத்தகைய சைவ சமய நூல்களைத் தம்மால் எழுத முடியாது என்று கருதியே தென்னகத்திற்குப் புலம்பெயர்ந்து சென்றிருந்தார். எனினும் யாழ்ப்பாணக் கிறிஸ்தவச் சூழலும் கிறிஸ்தவர் முயற்சிகளும் அவரை ஈழத்திலும் புகழ்பெறவிடாது தடுத்தன. நாவலரைப் பின்பற்றி சி.வை.தா.சைவத்தின் பெருமையைப் போற்றியும் கிறிஸ்தவ சமயத்தைத் தாழ்த்தியும் கூறியதால் அவரை யாழ்ப்பாணக் கிறிஸ்தவர் எதிர்த்தனர்.

தென்னகத்திலும் 1875ஆம் ஆண்டில் ராவ்பகதூர் பட்டம் பெற்ற சி.வை.தா. கண்டனங்களுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளாயினார். சி.வை.தா.பிறப்பினால் கிறிஸ்தவராக இருந்தமையால் மடாலயங்கள் அவரை அணைத்துக் கொள்ளவில்லை. நாவலரைப் போல சிறப்புச் செய்யவில்லை. சி.வை.தா.வின் சொந்த வாழ்க்கையிலும் அவர் மூன்று முறை மணஞ்செய்யும் நிலைமை ஏற்பட்டது. மனைவியர் இழப்பு, மகனின் இழப்பு என்பன அவரைத் துன்பத்திற்குள்ளாக்கிற்று. இன்னும் சி.வை.தா.வின் தென்னகத்து வாழ்க்கையை நோக்கும்போது சமூக நிலையிலே மதிக்கப்பட வேண்டிய தகுதிப் பாடுகளையும் புலமைச் சிறப்பையும் பெற்றிருந்த போதும் அவர் வரலாறு பேசப்படவில்லை. கிடைக்கின்ற செய்திக் குறிப்புகளிலும் சி.வை.தா. வின் பணி பலராலும் மதிக்கப்படவில்லையென்பதை அறிய முடிகின்றது. இதனைப் பின்வரும் செய்திக் குறிப்பு உறுதிப்படுத்துகிறது.

> "எத்தனையோ சிரமமெடுத்து நூல்களை வெளியிட்ட போதிலும் அதற்குக் கைமாறாகக் கிடைத்தது வசவுரைதான். ஆங்கிலம் கற்ற விற்பன்னர்கள் உதாசீனமாயிருந்தார்கள். தமிழ் கற்ற பண்டிதர்கள் சிலர் பொறாமை மிக்குப் பகை காட்டினார்கள். ஒரு சில அறிஞர்கள் தமிழ் நூல்களை வெளியிடுவதற்குத் தங்களுக்குத் தனியுரிமையுண்டென்று கருதினார்கள். அவ்வாறாவது நூல்களைப் பதிப்பிட முன்வந்தார்களா? அதுவும் இல்லை. முன்வந்தார்களாயின் தமிழ் நூல்கள் அழியாது பாதுகாக்கப்பட்டிருக்குமே. இவர்கள் செய்ததெல்லாம் குறை கூறிக்கொண்டிருந்தது ஒன்றேயாம்."[13]

சி.வை.தா.தென்னகத்தில் வாழ்ந்த காலத்தில் தன்னுடைய பதிப்பு முயற்சிகளைச் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை சில சமயங்களில் வேறுபட்ட போதும் அவர் திரும்பவும் யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ சூழலில் வந்து வாழவில்லை. மனந்தளராமல் தென்னகத்தி லிருந்தே பதிப்பு முயற்சிகளைத்

தொடர்ந்து செய்து வந்தார். அங்கிருக்கும் போதே தமிழ் கற்பிக்கின்றவர்களைப் பற்றியும், தமிழாய்வில் ஈடுபட்டவர்களைப் பற்றியும் சி.வை.தா.தனது கருத்துக்களை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார். குறிப்பாக வீரசோழியம் பதிப்புரையிலே தமது காலத்திலிருந்த மொழி வல்லார் பண்பினைப் பற்றி வருமாறு குறிப்பிடுகிறார்.

> "ஐரோப்பிய பாஷைகள் போல ஒவ்வொரு மொழியிலும் தன் சுயரூபமாகப் பக்குவிட்டு நில்லாது பலவாறு பிரியுந் தன்மையவாய்ப் புணர்ந்து நிற்கும் சமஸ்கிருத தமிழ் வாக்கியங்களை அவற்றிலுள்ள பதங்களை அர்த்தத்தோடு முன்னர் உணர்ந்தாவன். பிரித்துப் பயன்கொள்ளுதல் அருமையாதலின், அமரம், நிகண்டு முதலிய கற்றலே அவசியமென்பது இத்தேச வல்லார் துணிபு"[14]

இத்தகைய மொழி பற்றிய சி.வை.தா.வின் கருத்து அவர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஏற்படக்கூடிய இடையூறுகள் பற்றிச் சிந்தித்தமையை உணர்த்துகிறது. அதனால் தமிழ் கற்பிக்கின்ற தமிழறிஞர்களின் குறைபாட்டைச் சுட்டிக்காட்டவும் தயங்கவில்லை. சி.வை.தாவின் இத்தகைய கருத்துகள் தென்னகத் தமிழறிஞர்களை அவர்மீது வெறுப்புக் கொள்ள வைத்தது. மரபான தமிழாய்வு நிலையிலிருந்து வேறுபட்ட புலமை வாய்ந்த சி.வை.தா.வின் தமிழாய்வு, மரபுவழி நின்றவர்களால் மதிக்கப்படவில்லை.

இதனால் சி.வை.தா.வைப் பொறுத்தவரையில் தென்னகத்திலும் மரபு மீற முற்பட்டவராகவே கருதப்பட்டார். மக்கள் படிப்பதற்குச் சங்க இலக்கியத்தை நூல் வடிவிலே சி.வை.தா.கொணர்ந்தமை மடங்களால் விரும்பப்படவில்லை. ஆனால் உ.வே.சாமிநாதையர் குறுந்தொகைப் பதிப்பு பலராலும் விதந்து பேசப்பட்டது. தமிழக அறிஞர் என்ற தகுதிப்பாட்டால் தமிழகம் அவர் திறமையைப் புகழ்ந்தது. சி.வை. தா.வின் மேலைத்தேசக் கல்வி மரபான பயிற்சி தென்னகத்திலே பெரிதும் கணிக்கப் படவில்லை. ஆங்கிலமொழிப் புலமையால் தமிழர் சமயமும் பண்பாடும் நிலைகுலையும் என்ற எண்ணமே தென்னகத்திலே மேலோங்கி நின்றது. ஈழத்திலே யாழ்ப்பாணத்திலே ஏற்பட்ட மாற்றங்கள் இவ்வெண்ணம் வலுவடையக் காரணமாகின. தமிழ் நூல் ஆய்வு பற்றிய கருத்திலும் இக்காலத்தில் மாற்றம் ஏற்பட்டது. பழைய நூல்களிலே காணப்படும் குறைகளை எடுத்துக் கூறுவதே நூலாய்வு எனக் கருதப்பட்டது. ஏட்டு வடிவிலுள்ள நூல்களை அச்சு வாகனம் ஏற்றும் போது எல்லோரும் படிக்கக்கூடிய வகையில் அவற்றைப் பதிப்பிக்க வேண்டும். இது சி.வை.தா.வின் நோக்கமாக இருந்தது. இன்னும் நூலின் மூலப்பிரதியைத் தேடுகின்ற ஒரு முறைமையையும் சி.வை.தா. கடைப்பிடித்தார். மடாலயங்களில் பிரதிகளிருந்தாலும் அவற்றைத் தனியொருவர் எடுத்துப் படிப்பது கஷ்டமாக இருந்தது. மடங்களின் மரபான கல்வி முறை

தனிப்பட்டோர் கல்விக்குத் தடையாகவும் இருந்தது. சி.வை.தா.வைப் பொறுத்த வரையில் மடங்களின் தொடர்பு வெகு குறைவாகவே இருந்தது. சி.வை.தா.வின் பிறப்புச் சமயம் மடங்களின் தொடர்புக்கு மறைமுகமாக தடையாயிருந்தது

## 3. புலம்பெயர்நிலையும் மரபு மாற்றமும்:

"ஏறக்குறைய 40 ஆண்டுகள் சி.வை.தா.புலம்பெயர்ந்து வாழ்வு நடத்தியுள்ளார். அவ்வாறு அவர் புலம் பெயர்ந்து தென்னகத்திற்குப் போவதற்குரிய காரணங்களைத் தேடும்போது தான் அவர் கிறிஸ்தவச் சூழலில் வாழ்வு நடத்த விரும்பவில்லையென்ற உண்மையைக் காணமுடிகிறது. சி.வை.தா.வின் கல்விப் புலமை யாழ்ப்பாணத்தில கிறிஸ்தவச் சூழலில் பெரிதும் மதிக்கப்படவில்லை. வட்டுக்கோட்டை செமினரியின் கல்விப் பயிற்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர் சி.வை.தா.பிற்காலத்திலே செமினரியின் மாணவர்களிலே தலைசிறந்து விளங்கியவர் C.W.தாமோதரம்பிள்ளை யாவார்."[15] என்று மதிப்பிடப்படும் சி.வை.தா.வினால் செமினரியிலே யாழ்ப்பாணக் கிறிஸ்தவச் சூழலிலே தமிழ்ப் பணியைத் தொடர முடியவில்லை. 1855இல் வட்டுக்கோட்டை செமனரி இலங்கைக்கு வந்த ரூபஸ் அண்டர்சன் விசாரணைக் குழுவின் சிபார்சினால் மூடப்பட்டது. செமினரி சுவிசேடப் பணிகளில் வெற்றி காணவில்லை. எனவே அது மூடப்பட்டது. இச்சூழ்நிலையில் சி.வை.தா.அங்கு தமிழ்ப் பணியைத் தொடர முடியாதெனக் கண்டார். தமிழ்ப் பணியைத் தொடரத் தென்னகம் செல்ல வேண்டும் என முடிவு செய்தார். இது சி.வை.தா.வின் புலப்பெயர்வுக்குத் தகுந்ததொரு காரணமாயிற்று. ஆனால் சி.வை.தா.வுடன் உடன் கற்ற ஏனையோர் இவ்வாறு புலம்பெயர்ந்து செல்லவில்லை. சி.வை.தா.வின் போக்கு செமினரி கல்வியைவிட நாவலரின் செயற்பாடுகளால் மாற்றம் பெற்றது.

சி.வை.தா.வின் பிறப்புச் சமயமும் யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவச் சூழலும் சிறந்த கல்வியைப் பெற வாய்ப்பாயிருந்தன. ஆனால் அவருடைய தமிழ்ப் பணியைத் தொடர்வதற்கு ஏற்றதல்லதென்பதை நன்கு உணர்த்தியமையால் சி.வை.தா.வாழ்க்கைச் சமயத்தை மாற்றி வாழ்வுச் சூழலையும் மாற்ற எண்ணினார். கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் முன்னோடிப் பயிற்சியான ஆங்கிலக் கல்வி மரபு தமிழ்மொழியின் வளத்தையும் வளர்ச்சியையும் தடுக்க இருப்பதை சி.வை.தா.நன்குணர்ந்தார். அவருடைய தமிழ் மொழி மீதிருந்த பற்றும் ஆற்றலும், ஆர்வமும் யாழ்ப்பாணத்தை மறந்து தென்னகத்திலே வாழ்க்கை நடத்தப் பக்கபலமாக நின்றன. தமிழகத்திலே சைவச் சூழலில் தமிழ்ப் பணியைத் தொடர முடியுமென்ற உறுதிப்பாட்டை நாவலருடைய தென்னக வாழ்க்கை தெளிவாக சி.வை.தா.வுக்கு உணர்த்தியது. இன்னும் தமிழார்வம் கொண்ட பார்சிவல் பாதிரியாரின் தென்னக வாழ்வும் சி.வை.தா.வுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தது. யாழ்ப்பாணத்திலே கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் முயற்சியில் தமிழ்மொழிப் பயிற்சி குறைவுபடும் நிலையும் உருவாகியிருந்தது. சமூக மதிப்புக்கும் பொருள் தேட்டத்திற்கும் ஆங்கிலக் கல்வியே பெருவாய்ப்பைத் தரும் என்ற எண்ணமும் மக்களிடையே பரப்பப் பட்டிருந்தது. உரைநடை நூல்கள்பல சமயக் கண்டன நூல்களாக வெளி வந்தன. சமயத்தை இழித்தும், பழித்தும் இருசமயவாதிகளாலும் வெளியிடப்

பட்ட நூல்கள், கட்டுரைகள், பிரசுரங்கள் என்பன தமிழ்மொழியின் வளத்தைச் சிதைத்து வளர்ச்சியைப் பின்னடையச்செய்யும் எனச் சி.வை.தா. தெளிந்து கொண்டார். புதிதாகத் தோன்றிய இலக்கிய வடிவங்களும் தமிழின் பழமையை மறப்பதற்கு இடமளிக்குமென்பதையும் நன்குணர்ந்த சி.வை.தா.புலம்பெயர்வது நல்லது எனத்தெளிந்தார்.

தென்னகத்திலே யாழ்ப்பாணத்தில் இல்லாத ஒரு மரபான தமிழ் பேணும் சூழல் மடங்களிலே இருந்தமையால் தென்னகத்தில் தமிழ் பாதுகாக்கப்பட்டது. கிறிஸ்தவ சமயப் போதனைகள் உள்நுழைய முடியாத இடங்களாகவும் மடங்கள் விளங்கின. சி.வை.தா.நாடுவிட்டுச் செல்லும்போது தான்செல்லும் சூழலை அறிந்தவராகவே சென்றார். ஆனால் அவர் பிறப்புச் சமயம் மடங்களின் தொடர்புக்குத் தடையாக இருந்தது. அக்காலத்திலே யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற சைவர்கள் மடங்களோடு தொடர்புடையவராக இருந்தனர். இவர்களில் சபாபதி நாவலர் குறிப்பிடத்தக்கவர். சி.வை.தா.வைப்பற்றி தனது திராவிடப் பிரகாசிகையென்னும் நூலிலே அவர் வெளியிட்ட செய்திகள் மடங்களுக்கு சி.வை.தா.வின் பிறப்புச் சமயத்தை அறிவிப்பதாயிருந்தன. சி.வை.தா.தென்னக வாழ்க்கையில் இச்செய்தி குழப்பத்தைத் தருவதாகவே இருந்தது. எனினும் சி.வை.தா.மனந்தளராமல் தாம் புலம்பெயர்ந்து வந்த நோக்கத்தை நிறை வேற்றியுள்ளார். நாவலர், நா.கதிரைவேற்பிள்ளை போல சிறந்த பேச்சுவன்மை சி.வை.தா.வுக்கு இருக்கவில்லை. இதனால் சைவசமயச் சூழலில் அவர் தன்னை அறிமுகம் செய்ய முடியாமலிருந்தது.

மேலைத்தேச மரபான கல்விப் பயிற்சி பெற்ற சி.வை.தா.வின் தமிழாய்வு முயற்சி, கீழைத்தேச மரபான கல்விப் பயிற்சியுடையாருக்கு ஒரு மரபு மீறிய முயற்சியாகவே இருந்தது. பழந்தமிழ்நூல் சுவடிகளில் நீண்ட காலப் பயிற்சி யின்றி, அவற்றை நூலாக அவர் பதிப்பிக்க முற்பட்டமை தென்னகத் தமிழறி ஞர்க்கு ஒவ்வாத செயலாக இருந்தது. உ.வே.சாமிநாதையர், சபாபதி நாவலர் போன்றோர் சி.வை.தா.பற்றிய கருத்துக்களை எழுதுகையில் இந்த உணர்வுமிக்கவராயுள்ளதைக் காணலாம். பழந்தமிழ் நூல்களைப் பரிசோ திக்கும்போது பல்வேறு ஏட்டுச்சுவடிகளைப் பெற்று ஒப்பிட்டு ஆராய்ந்து மூலச் செய்யுட் பிரதியையே பதிப்பிக்க வேண்டும் என்ற சி.வை.தா.வின் பதிப்புக்கோட்பாடு மிக முக்கியமானது. ஆனால் அது மரபான தமிழறி ஞர்களது படியெடுத்தல் தவறுகளையும் செய்யுட்களைத் திரிவுபடுத்திய முயற்சியை எல்லோரும் அறியவைத்தது. பதிப்பு உத்திகளில் சி.வை. தா. நாவலரைப் பின்பற்றிய போதும் தமக்கென சில உத்திகளையும் ஆக்கியுள்ளார். அவருடைய பதிப்புரைகளிலே அவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். கலித்தொகைப் பதிப்பு உத்திகள் சிறந்தனவெனப் பின்வந்த பதிப்பாசிரியர் களாலும் கையாளப்பட்டுள்ளன. சி.வை.தா.பதிப்பித்த நூல்களிலே தமிழ் இலக்கண நூல்களே அதிகமாயுள்ளன. தமிழ் மொழியின் இலக்கண மரபு பேணப்பட வேண்டுமென அவர் எண்ணினார். தமிழிலக் கியமும் இலக் கணமும் அக்காலத்திலே புதிதாக அறிமுகமாகிய ஆங்கிலமொழியைவிட மிகுந்த வளமும் வளர்ச்சியுமுடையவை என்பதை உலகறிய வேண்டுமெனச்

சி.வை.தா. விரும்பினார். தமிழ்மொழியின் இலக்கியத்தையும் இலக்கணத்தையும் மேலை நாட்டவரும் கற்க வேண்டும் என எண்ணினார். பழந்தமிழ் இலக்கியங்களைத் தமிழர் படிப்பதற்கும் கருவி நூல்களான இலக்கண நூல்கள் தேவை. எனவே முதலில் இலக்கண நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

தமிழ்நாட்டிலே புலம்பெயர்ந்து இருந்த சி.வை.தா.வாழ்விடத்திற்கும், சூழலுக்கும் ஏற்ற பணியைச் செய்தார். யாழ்ப்பாணக் கிறிஸ்தவச் சூழலில் பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் தேவையற்ற நூல்களாயின. ஆங்கில மொழி மோகம் மக்களுக்கு ஊட்டப்பட்டதால் பழந்தமிழ் மொழியறிவை அவர்களுக்கு ஊட்டுவது கடினம். பதிப்பு நிலையிலே கிறிஸ்தவ சமயப் பரப்பலுக்கு ஏற்றவையே பதிப்பிக்கப்பட்டன. புதிய நூல்களும் அதற்காகவே எழுதப்பட்டன. இந்த நிலையில் சி.வை.தா. புலம்பெயர்ந்தது நன்மையே யாயிற்று. எனவே மரபு மீறியவராகச் சி.வை.தா கருதப்பட்டாலும் அவர் பணி காலத்திற்கேற்ற சிறந்த பணியாகிற்று.

சி.வை.தா.வின் வாழ்வு தென்னகத்திலேயே முடிந்தது. இருபதாம் நூற்றாண்டு முதல் மாதம் முதல் தேதி அவர் இவ்வுலக வாழ்வைவிட்டு மறைந்தார். சைவசமய மரபுப்படி அவருடை இறுதிக் கிரியைகள் நடந்தன. பிறப்புக் கிரியை கிறிஸ்தவ சமய மரபிலே நடந்திருந்த போதும் இறப்பில், அவர் தனக்குரிய சமயமெனத் துணிந்து கொண்ட சைவ மரபுப்படியே சி.வை.தா.வின் கிரியைகள் நடைபெற்றன. அவருடைய வாழ்க்கைச் சமயம் அவருடைய தமிழ்ப் பணிகளுக்குத் துணையாக நிற்கும் என அவர் நம்பினார். அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. சி.வை.தா.வின் புலப்பெயர்ச்சி புதுமையானதன்று அக்காலத்தில் ஈழத்தவர் பலர் கல்வித் தேட்டத்திற்குத் தென்னகம் சென்றுள்ளனர். அவர்கள் வரிசையிலே சி.வை.தா.ஒரு தனித்துவமுடைய வராக ஈழத்து வரலாற்றிலும் தென்னகத்து வரலாற்றிலும் ஆராயப்பட வேண்டியவராயுள்ளார். அவர் வாழ்ந்த காலப் பின்னணியும் அதற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

### நிறைவுரை:

சி.வை.தா.வின் தனித்துவமான இயல்புக்கு இரண்டு முக்கியமான காரணங்கள் இருந்தன. ஒன்று நாவலருடைய வாழ்வியல் நாவலர் தனது வாழ்க்கை நிலையை பின்வருமாறு கூறுகிறார்.

> "சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் தமிழ் நாடெங்கும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையானது என் சிறுவயதில் என் உள்ளத்தில் தோன்றி நாடோறும் பெருகிப் பெருகி இப்பொழுது அவ்வுள்ளத்தை விழுங்கித் தான் மேற்கொண்டு நிற்கிறது"

இத்தகைய ஒரு அநுபவம் சி.வை.தா.வுக்கும் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் தன் உள்ளத்திலே ஏற்பட்ட எண்ணத்தைச் செயற்படுத்த நாவலரைப் பின்பற்றி தன் பிறப்பிட த்தையும் பிறப்புச் சமயத்தையும் கைவிட்டுத் தென்னகத் சென்று பணி செய்தார்.

மற்றொரு காரணம் யாழ்ப்பாணத்துக் கல்வி மரபு மாற்றம் பெற்றமை. கல்வியானது சமயப் பரம்பலுக்கு ஒரு கருவியாகி ஆங்கில மொழியென்னும் கவர்ச்சியாடை பூண்டு நின்றது. ஆங்கில மொழியின் செல்வாக்கால் கல்வி யென்பது பதவி, பொருள்தேட்டம் என்னும் இலக்குகளில் தன்னை வரையறுத்துக் கொண்டது. பாடசாலைக் கல்வியெனப் புதிய வழியிலே மக்களை அழைத்துச் சென்றது. ஆனால் கிறிஸ்தவ சமயம் அங்கு பின்னணியில் நின்றமையால் 'எல்லோருக்கும் அறிவூட்டல்' என்ற கல்வியின் பரந்த நிலை சுருங்கியமைந்தது. மேலைத்தேசக் கல்விப் புலமையை விரும்பின் கிறிஸ்தவம் என்ற சமயத்திலே இணைய வேண்டும். இதுவரை நம்பிய சைவ சமயத்தைக் கைவிட வேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டது. எனவே சி.வை.தா. மரபுக்கல்வி ஆவணங்களைப் பேணவும் சைவத்தில் வாழவும் விரும்பி தென்னகம் சென்றார்.

சி.வை.தா.வின் புலமைச்சிறப்பை யாழ்ப்பாணம் பல காலமாக நினைக்க வில்லை. நாவலர் வழியிலே சென்று அவர் தமிழ்ப் பணி செய்தாலும் சி.வை.தா.பிறப்பினால் கிறிஸ்தவர் என்பதை சைவமரபு பேணியவர் மறக்க வில்லை. அதேவேளையில் கிறிஸ்தவர்கள் அவரை ஒரு சமயம் பேணா தவராகவே எண்ணி வந்தனர். சி.வை.தா. பற்றிய அண்மைக்கால நூல்கள் யாழ்ப்பாண மரபுபேண மீண்டும் முயல்கின்றன. சைவமும் தமிழும் என்று வாழ்ந்த நாவலர் வரலாறு சி.வை.தா.வின் வரலாற்றிலே வந்து கலந்தபோது சமயமும் தமிழும் இணைய முடியாத பொருள்களாயின. ஆனால் தமிழ் மொழியை அழியாது பேண சி.வை.தா.செய்த பணியை வருங்காலத் தலைமுறையினர் நன்குணர்வர். காலம் அவர்களுக்கு அதை நன்கு உணர்த்தும் என்பதில் ஐயமில்லை. தமிழ் உள்ள வரை சி.வை.தா.வும் தமிழர் வரலாற்றிலே நிலைத் திருப்பார்.

**அடிக்குறிப்புகள்:**

1. கணபதிப்பிள்ளை சி.ஆறுமுகநாவலர் ப.27 1979
2. சைவப்பெரியார் சி.வை.தாமோதரம்பிள்ளை தொடர் கட்டுரை தினகரன் வாரமஞ்சரி, 4.9.1977
3. செமினரி அறிக்கை, 1841 (தரவு அமெரிக்க மிசனும் இலங்கையில் தமிழ்வளர்ச்சியும் ஜெபநேசன்.எஸ் 1983)
4. மனோன்மணி சண்முகதாஸ் சி.வை.தா. ஓர் ஆய்வு நோக்கு ப.9, 1983
5. கணபதிப்பிள்ளை சி.மு.கு.நூல் ப.29
6. சபாபதி நாவலர் திராவிடப் பிரகாசிகை என்னுந் தமிழ் வரலாறு ப.55 1960 மறுபதிப்பு.
7. தாமோதரம்பிள்ளை சி.வை.சைவ மகத்துவம் ப.10
8. தாமோதரம்பிள்ளை சி.வை. விவிலிய விரோதப்பாயிரம்
9. சி.வை.தா.நினைவு மலர்க்கட்டுரை, ஈழகேசரி, 11.3.1945
10. வேங்கடசாமி மயிலை.சீனி, மறைந்து போன தமிழ் நூல்கள் ப.135
11. இராஜரத்தினம்பிள்ளை ரி.ஏ.தாமோதரம்பிள்ளையவர்கள் சரித்திரம், ப.91, 1934
12. சாமிநாதையர் உ.வே.என்.சரித்திரம் ப.784-791, 793-794, 813-820
13. வையாபுரிப்பிள்ளை.எஸ் தமிழ்ச் சுடர்மணிகள் ப.235, 1968
14. தாமோதரம்பிள்ளை சி.வை. வீரசோழியம் பதிப்புரை
15. ஜெபநேசன் எஸ்.மு.கு.நூல் ப.41



# கிராமந் தோறும் பண்பாட்டு விழா

**ச.லலீசன்**
*விரிவுரையாளர்,*
*கோப்பாய் ஆசிரிய*
*கலாசாலை*

## பண்பாடு

பண்பாடு என்ற சொல் Culture என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். பண்பாடு என்ற கலைச் சொல்லைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தியவர் அறிஞர் டி.கே.சிதம்பரநாத முதலியார் (டி.கே.சி.) ஆவார்.

பண்பாடு என்ற சொல் பல பொருள்களைத் தருகின்றது. "செவ்வி, குணநலம், சீர்திருத்தம், பெருமை, தண்மை, அமைதி, இயல்பு எனப் பல பொருள்கள் இச்சொல்லாற் சுட்டப்படுகின்றன. பண்பாடு என்ற சொல் உருவாக்கம் பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் அ.சண்முகதாஸ் "Culture என்னும் ஆங்கிலச் சொல் Kult (குல்ற்) என்ற ஜேர்மன் வினையடியில் இருந்து பிறந்ததாகும். இவ்வினையடி முதலில் நிலத்தைப் பதனிடுதல்" என்னும் பொருளில் அமைந்தது. தமிழ்ச் சொல்லாகிய பண்பாடு திருத்துதல், செப்பனிடுதல், பதனிடுதல், நலனாதல், தகுதியாதல் போன்ற பொருள்களைத் தருகிறது" என்கிறார்.

பண்பாடு என்பதற்கு பல பரிமாணங்கள் உண்டு. இது பற்றிக் கட்டற்ற கலைக் களஞ்சியமான விக்கிப்பீடியா பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "பண்பாட்டிற்குப் பல நிலைகளில் வரையறை உண்டு. பண்பாடு என்பது ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், அறிவுப் பரம்பல்கள், வாழ்வியல் வழிமுறைகள், சமூகக் கட்டமைப்பு என்பவற்றைச் சுட்டி நிற்கின்றது. மொழி, இசை, சமய நம்பிக்கைகள், தொழில்சார் தெரிவுகள், கருவிகள் போன்றவையும் பண்பாட்டிற்குள் அடங்குகின்றன."

இவை யாவற்றில் இருந்தும் பண்பாடு என்பது எம்மவரது அடையாளங்களுள் பிரதானமானது என்பது பெறப்படுகின்றது.

## கிராமம் சார்ந்த பண்பாடு

பண்பாடு என்கின்ற தளத்தின் ஆணிவேராக இயங்கக் கூடிய சக்தி கிராமங்களுக்கே உள்ளது. இனக்குழுக்களின் வாழ்விடமாக அமையத் தக்க கிராமங்களில் வேற்றுமைகள் குறைவாக இருக்கும். வேற்றுமையில் ஒற்றுமை காணக்கூடிய பண்பும் அதிகரித்துக் காணப்படும். இந்நிலைமைகள் கிராமம் சார்ந்த பண்பாடுகளை வாழ்வியல் முறைமைகளுடன் இணைத்துப் பேணுவதற்கு உதவுவனவாக அமைந்திருக்கும். இச்சூழமைவிலேயே கிராமங்களின் தனித்துவங்களைப் பேண வல்ல பண்பாட்டு அடையாளங்கள்

முளை கொள்ளத் தொடங்கியதாகக் கருத முடியும். பண்பாட்டுத் தனித்துவங்களைப் பேண முடியாத சமூகம் தமது தனித்துவங்களை இழந்துவிடுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

## உலகமயமாக்கலும் பண்பாடும்

பண்பாட்டுணர்வின் அடித்தளத்தை ஆட்டிப் படைக்கும் சக்தியாக இன்று 'உலகமயமாக்கல்' எதிர்கொள்ளப்படுகின்றது. உலகமயமாக்கலானது உலகில் உள்ள அரசியல் சமூக, பொருளாதார பேதங்களைக் கடந்து உலகத்தை ஒரு கிராமமாகச் சுருக்குகின்ற செயற்பாடாக அமைகின்றது. எனினும் இதனை முதலாளித்துவத்தின் ஒரு மாற்று வடிவமென்றே கொள்ள வேண்டியுள்ளது. தக்கன பிழைத்தலும் தகாதன அழிதலும் என்ற கூர்ப்புக் கோட்பாட்டிற்கு ஒப்பாக வலிதானவற்றையே உலகில் நிலைகொள்ள வைக்கும் செயற்பாட்டை உலகமயமாக்கல் பரிசாகத் தந்து கொண்டிருக்கின்றது.

இன்று நகரங்களாகத் தெரிவன யாவும் ஒரு காலத்தில் கிராமங்களாக இருந்தவையே. ஆனால் நகர் என்ற தகுதிப்பாடு பல்லின பல்கலாசாரச் சூழமைவை இயல்பாக ஏற்படுத்தும் அல்லது ஏற்றுக் கொள்ளும் மனோபாங்கை ஏற்படுத்திவிடுகின்றது. ஒரு சமூகத்தின் தனித்துவப்பண்பாடுகளை பேணிக் காக்கக் கூடிய தகுதிப்பாட்டைக் கிராமங்களே கொண்டுள்ளன. ஆனால் உலகமயமாதலின் 'அரிப்பு' (Erosion) கிராமங்களை விட்டு வைப்பதாகத் தெரிய வில்லை. இவ் அரிப்பினால் கிராமியப் பண்பாடுகள் நலிவுற்றுப் போகாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கின்றது.

## பிரதேசப் பண்பாட்டுப் பேரவைகள்

நாம் யார்? நமது தனித்துவங்கள் என்ன? என்பதை அறியாத கூட்டமாக நம்மவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அரசியல், சமூகக் காரணிகள் இவ் அறிகையை ஊக்குவிப்பதாகவும் தெரியவில்லை. இந்நிலையில் கிராம மட்டங்களில் பண்பாட்டு விழாக்களை நடாத்திப் பண்பாடு தொடர்பான விளிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் வலி.கிழக்குப் பண்பாட்டுப் பேரவையினர்க்கு ஏற்பட்டுள்ளது. கிராமங்கள் தோறும் பண்பாட்டுப் பேரவைகளை அமைப்பதன் மூலமும் கிராமிய மட்ட விழாக்கள் ஒழுங்கு செய்யப்படுவதன் மூலமும் 'நமது பண்பாடு' பற்றிய விளிப்புணர்வு நம்மவரிடையே ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் செய்யக் கூடியவை எவை? செய்யக் கூடாதவை எவை? என்பது பற்றியும் இக்கட்டுரையில் குறிப்பிட்டாக வேண்டும்.

## கிராமம் பற்றிய விழிப்புணர்வு

இன்றைய வாழ்வியலில் தாம் சார்ந்து வாழ்கின்ற கிராமத்தின் வரலாறு என்ன? கிராமத்திற்குரிய பெயர் எவ்வாறு ஏற்பட்டது? அதன் பொருத்தப்பாடு என்ன? என்பது குறித்துச் சிந்திப்போருடைய தொகை மிக அரிதாகவே காணப்படுகின்றது. அத்துடன் கிராம உள்ளடக்கம், கிராமம் சார் வளங்கள்,

தனித்துவங்கள், தேவைகள் பற்றிய அறிகையைப் பெற்றுக் கொள்ள கிராம மட்டத்தில் இடம்பெறும் பண்பாட்டு விழாக்கள் வழி செய்வதாக அமையும்.

கிராமத்திற்குப் பெருமை சேர்த்த பெரியார்கள் பற்றிய அறிகையும் அவர்களைக் கௌரவிக்கின்ற பெருமையும் கிராமத்திற்கு வளஞ்சேர்ப்பதாக அமையும். தனது சமூகத்திற்காக வாழ வேண்டும் என்ற ஊக்குவிப்பை இளம் நெஞ்சங்களிலும் ஏற்படுத்தும்.

## புத்துருவாக்கங்களுக்கு வழிகோலும்

இன்று காணொலி ஊடகங்களே எமது வாழ்வியல் கோலங்களைத் தீர்மானிக்கின்றன. நாகரிகம் என்ற திசையில் நகர்த்துகின்றன. இதன்பிடி தவிர்க்க முடியாததாயினும் கிராமம்சார் விழாக்கள் இத்தகைய நகர்வின் வேகத்தைத் தவிர்ப்பதற்கோ அல்லது மாற்று வடிவ உருவாக்கத்திற்கு வழி சமைப்பதற்கோ பயன்படும். எடுத்துக் காட்டாக இரவிரவாக இடம்பெறும் காத்தவராயன் கூத்து இன்று ஒரு மணி நேர நிகழ்வாக ஆற்றுகை செய்யப்படுவதைச் சுட்டலாம். கிராமியக் கலை வடிவங்கள் பல பல்கலைக்கழக மட்டத்தில் பட்டநெறிப் பாடங்களாகப் படிமலர்ச்சி பெற்றிருத்தலையும் நாகரிக வளர்ச்சியுடன் பொருத்தி பார்க்க வேண்டியுள்ளது.

## கலைகளின் இருப்பு நிலைக்கட்டும்

கரகம், மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் முதலிய கலைகள் மற்றும் சில குறிப்பிட்ட ஆடற்கலைகள் (வசந்தன் கூத்து, பப்பவராயன் கூத்து) இன்று அழிந்தொழியும் நிலையை எதிர்கொள்கின்றன. இவை பற்றிய பிரக்ஞை ஏற்படுவதற்குக் கிராமியப் பண்பாட்டு விழாக்கள் வகை செய்ய வேண்டும்.

கிராம மட்டங்களில் தற்போது இடம்பெறும் பல விழாக்களில் தென்னிந்தியச் சினிமாப் பாடல்களுக்கான அபிநயம் அல்லது உடலசைவுகள் இடம்பெறுவதையே காணமுடிகின்றது . அவ்வாறில்லாமல் எம்மவர்களின் வெளிப்பாடுகளைப் பரவலாக்கக்கூடிய களமாக கிராமியப் பண்பாட்டு விழாக்கள் அமைதல் வேண்டும்.

அரிதான கலைகளை ஆற்றுகை செய்யும் கலைஞர்கள், ஊர்வாழ உழைக்கும் உத்தமர்கள் போன்றோர் கௌரவிக்கப்படும் களமாகவும் இது அமையலாம்.

கிராமம் குறித்த 'காலத்தின் பதிவாக' மலர் வெளியீடு மேற்கொள்வதும் ஆரோக்கியமானது. இம்மலர் கிராமம் சார்ந்த தரவுகளையும் வரலாற்றுச் செய்திகளையும் கொண்டிருத்தல் நலம். எதிர்காலச் சந்ததியினருக்கான மிக வலுவான ஆவணமாக இம்மலர்கள் அமையும்.

கிராமம் சார்ந்த கொண்டாட்டங்கள் மெல்லமெல்லத் தனித்துவம் இழந்து வருகின்றன என்பதை பிரபல எழுத்தாளர் ஜெயமோகனும் ஓரிடத்தில் சுட்டியிருக்கின்றார். "கிராமியக் கொண்டாட்டங்கள் அனைத்துமே இன்று இல்லாமலாகிவிட்டிருக்கின்றன. கிராமங்கள் நகர்களின் சூம்பிய வால்கள் போலத் தனித்துவமிழந்திருக்கின்றன" என்று தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார். அவரது கூற்று மிகஆழ்ந்த பொருளுடையது.

## விஷப் பரீட்சையா?

இன்றைய உலகில் கிராமங்களின் நிலை பற்றிய மதிப்பீட்டிற்குப் பிரபல தமிழ் எழுத்தாளர் ஜெயமோகனின் கூற்று ஆதாரமளிப்பதாக இருக்கின்றது. எனவே காலத்தின் தேவையே கிராம மட்ட கலை பண்பாட்டு விழா என்ற அருட்டுணர்வைத் தோற்றுவித்துள்ளது. இத்தகைய செயற்பாடுகளே நம்மவர்க்குத் தேவை என்பதை உணர்ந்து தூர நோக்குடன் கிராம மட்ட கலை பண்பாட்டு விழாக்கள் கொண்டாடப்பட இருப்பது மனமகிழ்வைத் தருகின்றது. மாதந் தோறும் விழா என்பது நினைத்த மாத்திரத்தில் மனமகிழ்வுக்குரியதாக அமைந்தாலும் இதன் நடைமுறைச் சாத்தியத் தன்மை மிகுந்த சவாலுக்குரியதாகவே விளங்கும். பண்பாட்டு விழாக்கள் பற்றிய உணர்வெழுகையே இதன் சாத்தியப்பாட்டிற்கு உரஞ் சேர்க்கும்.


யாழ் குடாநாட்டில் இடம்பெறும் கலாசார விழாக்கள் பெரும்பாலும் சடங்காசாரங்களாகவே இடம்பெறுகின்றன என்ற ஒரு குற்றச்சாட்டு உள்ளது. வெறும் ஊடகப் பிரசாரங்களையே இவை தமது வெளியீடாக்கிக் கொண்டுள்ளன. மாறாக, வலி.கிழக்குக் கிராமியப் பண்பாட்டு விழாக்கள் கிராமிய எழுச்சிக்கு வழிகோலும் உந்து சக்தியாக அமைந்திருக்கும் என நம்புவோமாக.


**சிறுப்பிட்டி தொடர்பான தகவல்கள் :**

**இலங்கை, சர்வதேச நிகழ்வுகள், கலை, கலாசார**

**நிகழ்வுகள் ஆகியவற்றை உடனுக்குடன் பார்த்து அறிந்திட**

**www.siruppiddy.com**



# பசுவை வளர்ப்போம் பயன் பல பெறுவோம்

உலகம் எத்தனை விந்தைகளைக் கொண்டது. சிவனின் படைப்பை எண்ணிப்பார்ப்பவர்கள் எத்தனை பேர் உலகம் வேண்டும் அதனில் மண்ணும் வேண்டும் கடலும் வேண்டும் மரஞ்செடி கொடிகளும் வேண்டும். மழையும் வேண்டும் பிராணிகளும் வேண்டும் விலங்குகளும் வேண்டும் அதற்குள் உயர்ந்த மனிதனையும் படைத்தான் சிவன். இவையெல்லாம் மனிதனுக்கு வேண்டும் வேண்டும் என மேலும் மேலும் ஆசைப்படுகின்றான் மனிதன்.

முட்டையிலிருந்து கோழிக்குஞ்சு வருகின்றது குஞ்சுக்கு உணவு முட்டையில் தான் இருந்து எடுத்துக்கொள்கின்றது. குஞ்சு பொரித்து வெளி வந்ததும் தானே தன் வாயால் உணவு தேடி உண்கின்றது. விலங்குகளில் முலையூட்டி விலங்குவகைகளைப் பார்க்கின்றோம். பிள்ளையோ கன்றோ தாயின் வயிற்றில் வளர்கிறது. வயிற்றில் உள்ளபோதே தாயிடம் உணவு முதலியவற்றைப் பெற்றுக்கொள்கின்றது. ஆனால் தாயைக் குட்டி கொடுமைப்படுத்துவதில்லையே. கன்றையோ, குட்டியையோ ஈன்ற பின்னாளில் சிறிது காலம் தன்முலைகளிலிருந்து பாலைக் கொடுத்து கன்றை வளர்க்கின்றது. ஆட்டுக்குட்டியோ பசுவில் பால் குடிப்பதில்லை பசுக்கன்று எருமையில் பால் குடிப்பதில்லை. ஆனால் மனிதனோ எல்லாவற்றிலிருந்தும் பாலைப் பெற்றுக் குடிக்கின்றான்.


தாயின் வயிற்றில் பிள்ளை பத்துமாதம் வளர்கிறது. தாய் பிள்ளைக்கு வேண்டிய அத்தனையையும் தன்னிலிருந்து கொடுக்கின்றாள். குழந்தை பிறந்ததும் தாய் தன்பிள்ளைக்குப் பால் கொடுக்கின்றாள். வேறு யாருக்கும் கொடுக்க மாட்டாள். பிள்ளைக்குப் பால் கொடுக்க தான் பசுவின் பாலைக் குடிக்கின்றாள். போதாதென்று பிள்ளைக்கும் பசுவின் பாலை ஊட்டுகின்றாள். இது என்ன விந்தையா? விளையாட்டா? அறிவின் உச்சமா?

பசு தன்கன்றுக்குப் போதுமான பாலை மட்டும் சுரப்பதில்லையே ஏனைய உயிர்களுக்கும் பால் கொடுக்குமாறு சிவன் படைத்திருக்கின்றானே. என்ன விந்தை யோசித்துப் பார்த்தால் சிவனின் செயலன்றோ. இதனாலன்றோ இப்பாலை நம்மவர்கள் தெய்வத்துக்கும் அர்ப்பணமாக்குகின்றார்கள். கிரியைகளுக்குத் தேவையான பஞ்சகௌவியங்களைக் கொடுப்பதும் பசுவே. இதிலே பால், முதன்மை பெறுகிறது. பாலிலிருந்து பெறும் தயிர், நெய் இத்தோடு கோசலம், கோமயம் ஆகியவற்றையும் தருவது பசுதான். மேலும் இறைவனுக்குச் செய்யும் அபிஷேகத்திலும் பால், தயிர், நெய் முக்கிய இடம் பெறுகிறது. விளக்கேற்றுவதற்கு சூழல் மாசடையாது சிறந்த எண்ணெய் பசுநெய் தானே. மேலும் நன்கு முதிர்ந்த பசுக்களிலிருந்து கோரோசனையும் பெறப்படுகின்றதல்லவா?

மேலை நாடுகளில் பசுக்களைச் சீராக வளர்த்து பாலைப்பெற்று அந்நாட்டில் வாழ்கின்றவர்கள் குடித்து எஞ்சியபாலை கட்டியாக்கியும், பவுடராக்கியும் பால்மா வகைகளாக ஏற்றுமதிசெய்து பணம் சம்பாதிக்கின்றார்கள் பசுதான் அவர்களுக்கு செல்வமாக உள்ளதே. இதனால் அவர்கள் ஆரோக்கியமாகவும் சந்தோசமாகயும் மகிழ்வுடனும் வாழ்கின்றார்கள். ஆனால் நம் நாடு எங்கே? சிந்திக்கின்றீர்களா?

குழந்தை பிறக்கின்ற காலத்தில் சில தாய்மார்கள் இறந்திடுவார்கள். இக்குழந்தைக்குப் பால் கொடுப்பது யார்? ஒரு தாய் தன்பிள்ளைக்கு மட்டும் தானே பால் கொடுப்பாள் அதுவும் கொடுக்காத சிலதாய்மார்களும் உண்டு. அழகு கெட்டுவிடுமாம். அவர்களைத் தாயென்று சொல்ல முடியுமா? ஆனால் தாயில்லாத குழந்தைகள் மட்டுமன்றி ஏனைய குழந்தைகளுக்கும் பசு தாயாகிறது. இதனாலன்றோ கோமாதா எங்கள் குலமாதா என்கின்றார்கள் பசுப்பாலே அப்பிள்ளைகளுக்கு உணவாகின்றது. தாய்ப்பால் குடித்து வளராத மனிதர்கள் இந்த உலகத்தில் இருக்கலாம் ஏனென்றால் சிலவேளை குழந்தையை பெற்று வளர்க்கும் காலத்தில் தாய் இறந்திருக்கலாம். ஆனால் பசுப்பால் குடித்து வளராத மனிதர்கள் இருக்க முடியுமா? சிந்தியுங்கள் எல்லோரும் பசுப்பால் குடித்தீர்கள் தானே.

தேனீர், கோப்பிகளிலும் பால், ஐஸ்கிறீம் வகைகளிலும் பால்தான் சொக்கிலேட் வகைகளிலும், பிஸ்கற் வகைகளிலும் இன்னும் எத்தனை தின்பண்டங்களிலும் பசுப்பாலே பயன்படுகிறது. லக்ஸ்பிறே, அங்கர், கைலண்ட் என்கிறீர்களே அதுவும் பசுப்பாலிலிருந்து தானே உருவாக்கப்பட்டது. இவற்றை உண்ணாதவர்கள் யாரும் உளரோ? இவர்களுக்கெல்லாம் பசு தாயல்லவா? "உப்பிட்ட வரை உள்ளளவும் நினை" என்பது பழமொழி. அப்படியானால் பால்கொடுத்த பசுவை எவ்வளவு காலம்வரை நினைக்க வேண்டும். போற்றவேண்டும் என்பதை யோசிக்க முடிகிறதா?



மனிதர்களே தாரா ஒன்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொன் முட்டை இட்டு வந்ததாம் அதை வளர்த்தவன் அந்தப் பொன் முட்டைகளை எடுத்து விற்றுப் பணக்காரன் ஆனான். அவனுக்கு ஆசை அதிகரித்தது அது பேராசையானது. பேராசை பெருநட்டம் என்பது உங்களுக்குத் தெரியுமே.
அதேபோல் அவனும் படித்திருந்தான் ஆனால் ஆசை யாரைத்தான் வாழ வைத்தது. ஒரு நாள் தாராவை வெட்டினால் அதன் வயிற்றில் பல பொன் முட்டைகள் இருக்கும்என எண்ணினான் அவற்றை எல்லாம் விற்றால் நான் கோடீஸ்வரனாகி விடுவேனே என நினைத்தான். நாங்களும் சில வேளை இவ்வாறுதான் கோட்டை கட்டுவோம். நீங்களும் கற்பனைக் கோட்டைகட்டி விடாதீர்கள் தாராவின் வயிற்றை ஒரு வாளால் வெட்டினான் வயிற்றில் ஒரு பொன் முட்டையே இருந்தது. அதுவும் வெட்டுண்டது. தாராவும் இறந்தது. பொன் முட்டை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாளும் கிடைக்காமலேயே போனது. தன்மதியீனத்தை எண்ணிக் கவலைப்பட்டான். கண்ணீர் வடித்தான். தாராவை உயிர் பிழைக்கச் செய்யலாமா?

முன்னல்லவா யோசிக்க வேண்டும் தாராவை வெட்டிய கொலைப் பாவமும் அவனைப் பற்றிக் கொண்டது அல்லவா? இக்கதைகளையெல்லாம் நீங்களும் படித்திருக்கின்றீர்களே மேலும் பலவற்றைப் படித்திருக்கின்றீர்களே சிலர் பட்டங்களும் பெற்றிருக்கின்றீர்களே. இதன் பிற்பாடும் இவ்வகையான கொடுமையான பாவம் தரும் செயல்களைச் செய்யலாமா? சிந்தியுங்கள் நான் செய்யவில்லையே நாம் சொல்லவில்லையே என்று சிந்திப்பது விளங்கு கின்றது. ஆனால் நீங்களும் காரணமாகவே உள்ளீர்கள்.

உலக மனிதர்களையே வாழ வைக்கும் நிறையுணவை உற்பத்தியாக்கும் பசுக்களோ ஒரு தொழிற்சாலைக்கு மேலான பணியைச் செய்கின்றது. இப்பசுக்கள் மனிதருக்குப் பயன்படும் உணவுகளை உண்பதில்லையே. மனிதருக்கு வேண்டிய உணவை நாம் எடுத்துவிட மிகுதிக் கழிவுகளையே உணவாக உட்கொள்கின்றது. புல், பூண்டுகள், வைக்கோல், தவிடு, பிண்ணாக்கு, உழுந்து, பயறுக் கோதுகள், இலை குழைகள் என்பனவே உணவாகிறது. பசு இவற்றையெல்லாம் உண்டு சத்துக்கள் அடங்கிய சுவையான பாலைத் தருகின்றது. இப்பசுவை நாம் சரியாக முறையில் வளர்க்கின்றோமா? பராமரிக்கின்றோமா இன்று பசுக்களின் எண்ணிக்கை குறைவடைவதேன்.

பசுவில் நாம் நித்தம் வழிபாடு செய்யும் பிள்ளையார், சிவபெருமான், உமை, முருகன், நாராயணன், வீரபத்திரர், மகாலட்சுமி, கல்வியைத் தரும் சரஸ்வதி, ஆஞ்சநேயர் ஆகிய தெய்வங்கள் மட்டுமன்றி முப்பத்து முக்கோடி தேவர்களும் விரும்பி உறைந்து கொள்கின்றார்கள் இதனாலன்றோ கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெற முன்னர் பசுவை சில நாட்களுக்கு கோயில்களுக்குள் கட்டி வளர்க்கின்றார்கள். புதுமனையை அமைத்த பின்னர் புதுமனைப் பிரவேசம் நடைபெற முன்னர் வீட்டிற்குள் பசுவைக் கட்டி வளர்க்கின்றார்கள். இது மட்டுமா கோயில்களில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதும் திருக்கதவு சாத்தப்படும். முன்னே நிறைகுடம், குத்துவிளக்கு, கண்ணாடி, பிராமணோத்தமர்கள், பிரமச்சரியன், இல்லறத்தான், துறவி, எஜமானர்கள், பக்த சனங்கள் ஆகியவற்றோடு பசுவையும் அதாவது கன்றுடன் கூடியதாய்ப் பசுவையும் அழைத்து பசுவுக்குப் பூசை செய்து தேவாரம்பாடி திருக்கதவைத் திறந்து எம்பெருமானே பசுவில் தனது பார்வையை முதலில் செலுத்துகின்றார் என்றால் நாமெல்லோரும் தினமும் காலையில் எழுந்து பசுவைத் தரிசனம் செய்தால் அன்றைய தினம் தீமைகளகன்று நன்மைகள் விளையுமல்லவா? மகாலட்சுமி கடாட்சம் கிட்டுமல்லவா?

கடவுளைத் தினமும் வழிபாடு செய்வது அவசியமானது போல பசுவுக்கும் ஒருபிடி புல்லோ, குழையோ கொடுத்துப் பசுவை வழிபடுவதும் இன்றியமையாததேயாம் மற்றவர்களோடு உரையாடுகையில் இன்சொல் பேச வேண்டும் என்று பலரும் கூறுகிறார்கள் நாமும் இதனை ஏற்றுக் கொள்கின்றோம். உண்ணும் வேளையில் மற்றவர்களுக்கும் கொடுத்துண்ண வேண்டும்என நமக்கு காக்கையே வழிகாட்டுகிறது. இதனையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோமல்லவா? இதனாலன்றோ "எள்ளென்றாலும் ஏழாய்ப் பங்கிட்டு உண்" என்றார்கள் இவற்றையே பின்வரும் திருமந்திரப் பாடலும் தெளிவு படுத்துகின்றது.

"யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே.

எனவே சிறுவர் முதல் பெரியோர் வரை ஆண்கள் முதல் பெண்கள் வரை இக்காரியங்களை தினமும் செய்து கொண்டால் நமக்கு எவ்வளவு நன்மைகள் விளையும் என்பதை நாம் சிந்திக்க வேண்டாமா?

எம்முன்னோர்கள் எல்லோரும் இதனை உணர்ந்துதான் வீட்டுக்கொரு பசு வளர்த்தார்கள். பசுவை வழிபட்டார்கள். பசுவைத் தரிசித்தார்கள், நல்ல பயன்களைப் பெற்றார்கள். தம் குடும்ப உறுப்பினர் போல் பேணினார்கள் இவ்வாறு இருந்த காலத்தில் நமது சமயத்தை தூஷிக்க வந்த போர்த்துக்கேயர் நாம் வணங்கும் பசுவை வெட்டி தாம் உண்டால் எம்பண்பாடு சீரழியும் என வீட்டுக்கொரு பசு தினமும் தரவேண்டும் என வாங்கினார்கள்.

இவ்வாறு பசுவைக் கொடுத்துவரும்போதில் திருநெல்வேலி ஞானப் பிரகாசர் நன்கு யோசித்தார் நான் நான் பசுவைக் கொலை செய்யக் கொடுப்பதா. பசுவை வளர்ப்பதற்கு தானமாகக் கொடுப்பது புண்ணியத்தின் மேல் புண்ணியம். பசுவை வெட்டி உண்ணக்கொடுப்பது மகாகொடிய பாவம். என்பதை உணர்ந்து இரவோடு இரவாகப் பசுவையும் கன்றையும் அழைத்துக் கொண்டு தானும் கடல் கடந்து இந்தியா சென்றார். இப்புண்ணிய கைங்கரியம் செய்து பசுவைக் காப்பாற்றியதால் உயர்ந்த ஞானியானார் சிதம்பரத்தில் பலநாள் வாழ்ந்து பல நூல்களை எழுதினார். சைவசித்தாந்த நூல்களுக்கு உரை எழுதினார். பேரின்பமுத்தி கண்டார். யாழ்ப்பாணத்தவருக்குப் பெருமையும் கொடுத்தார். இவற்றையும் நாமறிய வேண்டும்.

பசுவை வெட்டிய போர்த்துக்கேயனும் போய்விட்டான். ஆனால் போர்த்துக்கேயனல்ல நம்மவர்களே நாம் பெரியவர்கள், உயர்சாதியில் பிறந்தவர்கள் நம்முன்னோர்கள் சிவபூசை செய்தவர்கள் ஆலயபரிபாலகர்கள் என்று சொல்லிக்கொண்டு மாட்டிறைச்சிக்காக கடைகளில் கியூவில் நிற்கிறார்களே இது பகுத்தறிவுள்ள மனிதன் செயலாகுமா? சைவர்களென்றால் பஞ்சமா பாதகத்தை செய்யாதவர்களன்றோ. எமது சமயத்தைப் பின்பற்றி வந்த பௌத்தர்களோ பசுவைக் கொலைசெய்யவில்லை மாட்டிறைச்சியை விரும்பிப் புசிக்கவில்லை. பசுவைப் பாதுகாக்க வேண்டும் எனத் தொழிற் படுகின்றார்கள் இலங்கை அரசாங்கமே பசுவைக் கொலை செய்வது பிழையானது குற்றமானசெயல் என பசுக்கொலை செய்யக்கூடாது என்று சட்டமியற்றிப் பாதுகாக்க முனைகின்றது.

ஆனால் தமிழர்களோ நல்ல பண்பாடுடையவர்கள் எனக் கூறிக்கொண்டு சட்டத்தையும் மீறிக் கொலை செய்கின்றார்களே. இதற்குச் சில அதிகாரிகளும் துணைபோகின்றார்களே. அனுமதி வழங்குகிறார்களா

என்று சிந்திக்கும்போது மனம் வெதும்புகிறதில்லையா? இத்தனைக்கும் மேலான கொடிய பாவத்தையல்லவா சம்பாதிக்கின்றார்கள்.

தன் இரத்தத்தையே பாலாக்கி நமக்குத் தரும் பசுக்களுக்கும் இந்தக் கொடுமையா அப்படியானால் மனிதன் தன்னைத் துன்பப்படுத்துவது பிழை என்கின்றார்களே இது எவ்வளவு தூரம் பொருத்தமானதாகும்.

எமது மனித உடலில் தோல் காயப்பட்டு சிதைந்து உள்ளே உள்ள தசை தெரிந்தால் அது புண் என்கின்றார்களே மணக்கிறது எனக் கைகளா லேயே தொட வெறு ன்றார்களே விஞ்ஞானம் படித்திருக்கின்றீர்களல்லவா? எம் தசைக்கும் மாட்டின் தசைக்கும் வித்தியாசமுண்டா? அப்படியானால் புண்ணையல்லவா சீ.... வாயிலிட்டு ருசிக்கின்றீர்கள் பகுத்தறிவுள்ள மனிதனே உனக்கு இது பொருந்துமா?

மாமிசத்தை ருசித்துப் புசித்தவர்கள் என்னதான் கோயில்களில் வழிபட்டாலென்ன அபிஷேகம், பூசை, திருவிழா என்பவற்றைச் செய்து கொண்டாலென்ன புண்ணியம் கிடைக்குமா? விமோசனம் வருமா? கடவுள் தான் பாவம் எவ்வாறு வரம் கொடுக்க முடியும்.

திருமண வீடுகளில் மணமக்கள் நன்றாக வளர வேண்டும் பதினாறு வகையான செல்வங்களும் பெறவேண்டும் என்ற நோக்கில் மாங்கல்யம் சூடியபின் பசுவுக்கு உணவு கொடுத்துப் பசுவை வழிபடுகின்றார்கள். பலர் முன்னிலையில் பசுவை வழிபட்டுவிட்டு மறைவாக மாட்டிறைச்சியைப் புசித்தால் அது எவ்வளவு கொடுமையானது. தன் உயிருக்கு தானே உலை வைக்கும் நிலையல்லவா? பின்னர் இறைவனோடு நோவார்கள்.

ஒரு பசுவை வெட்டி கொத்துறொட்டியில் சுழற்றி கொடுப்பில் வைத்து சுவைத்துவிட்டு இன்னொரு பசுவின் பாலைக் குடித்து உடம்பு வளர்ப்பது பொருந்துமா. பிள்ளைகள் வளரப் பால் கொடுப்பது எவ்வளவு துரோகத்தனமான செயலாகும் நன்றிகெட்ட மனிதர்களே தாயைக் கொன்ற பாவத்தைவிட மேலான பாவம் பசுவைக்கொன்ற பாவம். இவ்வகைப் பாவச் செயல்கள் இந்தப் பிறப்பிலேயே அவனுக்கு தீமையைக் கொடுப்பதோடு மறு பிறப்புக்களிலும் துன்பங்களை அனுபவிக்கச் செய்யும் என்பதைப் பலர் உணருவதில்லை.

பசுவை வெட்டிக்கொலை செய்தவன் அடுத்த பிறவி பசுவாகப் பிறக்க அதை இன்னொருவன் வெட்டிக் கொலை செய்து உண்பான். அப்போது தான் வேதனை புரியும். தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்று அடிக்கும் என்பார்களே இவ்வாறு தான் ஒருவர் பசு மாட்டிறைச்சியைச் சுவைத்து ருசித்துப் புசித்து வந்தார். ஒருநாள் இவருடைய மாட்டையே திருடர்கள் திருடிச்சென்று வெட்டிக்கொலைசெய்து இறைச்சியாக்கிக் கொண்டு சென்றுவிட்டார்கள் தலை அப்படியே இருந்தது சென்று பார்த்தார்

கண்களிலிருந்து கண்ணீர் வடிவதைப் பார்த்தார். இதன்பின் தான் மட்டுமன்றி அயலவர்களையும் இறைச்சி சாப்பிடுவதை விட்டுவிடச் செய்தார்.

பெரியோர்களே நண்பர்களே முற்காலங்களில் பசுவின் எருவைப் பசளையாகப் பயன்படுத்தினர் நிலத்திற்கும் தாவர உணவிற்கும் நீர் நிலைகளுக்கும் மனிதனுக்கும் மாசுக்கள் சேரவில்லை. இன்று நவீன பசளைகள் சூழலை மாசடையச் செய்து மனிதனுக்குப் புற்றுநோய் போன்ற பல நோய்கள் ஏற்படுகிறது. எனவே பட்டிப்பொங்கல் பொங்கும் நாளில் பசுக்களைப் பேணி நீராட்டி, பொங்கல் பொங்கிப் படையல்செய்து பூசைசெய்து பசுவைப் போற்றுவோம் அன்றோடு விட்டுவிடாது தினமும் பசுவைப் பாதுகாப்போம். பசு வதையை நிறுத்துவோம் என்ற உறுதி மொழிகளை நாம் இதயபூர்வமாக ஏற்றுக் கொள்வோம். பயன்பெறுவோம்.

எமது பண்பாடு மேலானது. சைவர்கள், தமிழர்கள் மாமிசம் புசிப்ப தில்லை, கொலை செய்வது பாவம், கொன்றதைத் திண்பது பாவம் என திருவள்ளுவரே திருக்குறளில் தெளிவுபடுத்துகின்றார். இத்தகு பண்பாட்டை நாமெல்லோரும் கடைப்பிடித்தால்தான் எமது இனத்திற்கு, சமயத்திற்குப் பெருமையானது. சிவபெருமானே பசுவையும், இடபத்தையும் வாகனமாகக் கொண்டுள்ளார். இவை தருமதேவதையின் வடிவம் இதனால்தான் ஆலயங்களில் நந்தியை வழிபாடாற்றுகின்றோம். இந்த நந்திக்கொடியே யாழ்ப்பாணத்தின் கொடி யாழ்.பல்கலைக்கழக இலச்சினையிலும் காணப்படுகின்றது. இவற்றின் பண்பாடுகளை நாம் ஒவ்வொருவரும் பேணுவோம். என உறுதி மொழி கொள்வோம்.

சைவப்புலவர்
**செ.கந்தசத்தியதாசன்**
செயலாளர்
அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.

## எது விருத்தி

மாடி அழகும் மிக நல்ல அழகும் மேலைக் கலாசாரமும்
கோடி கோடியாய் மரம் நட்டும் சோலை அழகும் அழகல்ல
நாடிவரும் எம்மாணவரின் நாட்டம் அறிந்து அவரை
தேடி உயர்த்தும் கல்வி விருத்தியே விருத்தி.

கவிஞர் புத்தூர் விஸ்வம்
**செ. விசுவலிங்கம்**

# Our Village Siruppiddy

Siruppiddy is in the heart of Jaffna peninsula, fifteen kilometers away from Jaffna town. There are two G.S divisions such as Siruppiddy East and Siruppiddy West. Siruppiddy always feels proud of Rav Bhadur S.V.Thamotharampillai, the son of the soil.He is a well-known scholar, the first graduate from the Chennai University.

The village is fertilized by three varieties of soil. The western part has 'Red Soil', a golden earth that produces cash crops such as onion, tobacco, bananas and other vegetables. The middle portion is fine or cultivating bananas, onion and vegetables. The Eastern soil is salatern ,favourable for paddy cultivation. Hence, every man from the village is self sufficient as he has not only gardens and paddy fields but also domestic animals as cows, bulls and goats. The eastern part is good for coconut trees too.To enrich the irrigation the late Hon. Prime minister declared open the irrigation system from Nilavarai to Siruppiddy West in the early 50s. It was a golden gift for the farmers.

Even though most of them are farmers there are scholars too. There were doctors, engineers, teachers, pandits and officers Still there are about hundreds of officers including doctors engineers, teachers and officers.

Siruppidy Hindu Tamil mixed School played a major role in producing the scholars and good citizens in the village. It was established by Mr. S. Kanagasabai, a philanthropist of the village.Teachers were appointed not only from the local village but also from other parts of Jaffna. A school for the people in the West part was started in the early fifties by the government. It is called as Siruppiddy Government Tamil Mixed School. The school fulfills the needs of the kids in the area. A weaving Centre was established by the A.G. A Kopay in 1960 and it was declared open by the late Hon. Minister Maithripala Senanayake.

Above all a man needs spiritual health.To fulfill this there are many temples in the village. But the oldest are the 'Sellapillaiar' temple and the 'Manonmani' temple. The former one was established about 150 years ago by one of the pilgrims of the village who frequently used to go on pilgrimage to India. He brought the idol from Varanasi and performed the rituals in the present temple. The temple was administered by one man and later on it is administered by the trustee board. The latter one was established about 100 years back and was administered by one man. Now it is under the maintenance by the trustee board. Apart from these two there are Vairavar temples in Siruppiddy East, West and North. They are maintained well by the public.There are also Amman temples such as 'Muthumary' and 'Thurka ' temples in Siruppiddy North. They too are very famous and devotees throng in for worship. There is a Sivan temple and an Amman temple in Siruppiddy West & the poojas are carried on well by priests.Amidst the paddy fields there stands majestically a temple of Poothevarayar. Farmers of the village have great faith in Him.

The village needs renovation of by lanes and the water resources for the cattle. The by lanes have been completely neglected for the past 60 years. People find it difficult to travel during rainy seasons. On behalf of the people of Siruppiddy we expect a favourable future.

**Mrs. P. Thevaransitham**
**Rtd. Teacher**

## கலை விளக்கம் வாழியவே!


செந்தமிழ் மணமும் சைவத்திருமுறை
மணமும் வீசும் எம்
சுந்தரச் சிறுப்பிட்டியூரின் அருந்
தவப்புதல்வன்
நந்தமிழ் காக்க வந்த நாயகன் சி.வை.
தாமோதரனார் புகழ்
வந்திடும் கலைவிழா கவினுற
வளர்க! வாழ்க!

சீராரும் சிறுப்பிட்டியூர் செல்வர்
மழவராயர் வள்ளல் வழியில்
ஓராரும் கலை விளங்க ஏற்றமுடன்
சோமஸ்கந்தர் வளர்த்து
பாராரும் புகழ்ந்திடவே பெருமையுடன்
பரம்பரையாய் தமிழ் வளர்த்து
நீராரும் நிலவுலகம் நிற்கும்வரை
வாழியவே பல்லாண்டு!

மண்ணில் நல்ல வண்ணம் வாழ
வைக்கும் செல்ல(வ)ப் பிள்ளையார் சிவன்
எண்ணி மனோன்மணியம்மை முத்துமாரி
வயிரவர் துர்க்கை காளி வீரபத்திரர்
வண்ணமலர் சாத்தும் சிவபூதராயர்
வடிவாகிய கோயில் பலவும்
கண்கண்டதெய்வமாம் கல்விக்
கோயில்களும் வாழி வாழி!

வாழியவே கலைபண்பாட்டு விழா
வாழியவே பல்கலைகள்
வாழிய நம் தமிழ்மொழி பண்பாடு
வாழியவே நம்தமிழர் கலைகள்
சிறுப்பிட்டியூரும் சீர்பொருந்தி
வளர்ந்து மிக ஓங்கி வாழியவே
உறுத்தும் விழியாள் எம் மனோன்மணி
அம்மை உறுதுணையே.

கவிஞர் புத்தூர் விஸ்வம்
**செ. விசுவலிங்கம்**
முன்னாள் ஆசிரிய ஆலோசகர் – தமிழ்
சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி.



## திரு.சின்னத்துரை பாலசுப்பிரமணியம் (பாக்கியநாதன்) நாதன் சவுண்ஸ் ஒலிபெருக்கிக் கலைஞர்
## பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி வடக்கு.

*1950.11.09ஆம் திகதி சின்னத்துரை கோவிந்தம்மா தம்பதிகளுக்கு அவதரித்த மூத்த புத்திரன். யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியில் இளமைக் கல்வியைப் பெற்றார் றுவயதிலேயே பாடும் திறமை பெற்றவர்.இசை, தவில் நாதஸ்வரத்தையும் நன்கு இரசிப்பவர். சிறந்த அறிவிப்பாளர் 1968ஆம் ஆண்டு முதல் ஒலிபெருக்கி சேவையை தொழிலாக ஆரம்பித்து திறம்படச் செய்து வருகின்றார். யாழ்ப்பாணக் குடாநாட்டில் 2ம் உலக இந்து மாநாடு முதல் சிறந்த நிகழ்வுகளுக்கெல்லாம் இவரது ஒலிபெருக்கியையே அழைத்துக் கொள்வார்கள். பிரபல இலங்கை இந்தியக் கலைஞர்களது ஒலிப்பதிவுகளையும் திறம்பட செய்து கொடுத்துள்ளார். பிள்ளைகளையும் இத்துறையில் வளர்த்து தொழில் நுட்பவியலாளராகவும் உருவாக்கியுள்ளார்.*



## திரு.கனகசபை கந்தசாமி
## அண்ணாவியார்
## பன்னாலை, சிறுப்பிட்டி கிழக்கு

*கனகசபை சோதிப்பிள்ளை தம்பதிகளுக்கு புத்திரனாக அவதரித் தவர் இளமைக் கல்வியை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் பெற்றார். 1986ஆம் ஆண்டு சின்னத்துரையின் நெறிப்படுத்தலில் காத்தவராயன் நாடகத்தில் பங்கேற்று பல மேடைகளில் நடித்தவர் 1990களி லிருந்து காத்தவராயன் நாடகத்தைப் பழக்கும் அண்ணாவியராக செயற்பட்டு வருகிறார். அழியாத கோலங்கள், பெண் புத்தி பின் புத்தி எதையும் தாங்கும் இதயம், விதியின் விளையாட்டு, சிறகிழந்த பறவை, கல்லறை, முடிசூடா மன்னன், சகோதர பாசம் போன்ற பல நாடகங்களை எழுதித் தயாரித்து பல பாகங்களிலும் மேடை ஏற்றி பாராட்டுதல்கள் பெற்றார். இவற்றில் சகோதர பாசம் எனும் நாடகம் யாழ்.வீரசிங்க மண்டபத்தில் முதலாம் இடம் பெற்றது. மேலும்பல நாடகங்களையும் எழுதி பயிற்றுவித்து மேடையேற்றி வருகிறார். இவற்றோடு காவடிகள், பறவைக் காவடி, தூக்குக் காவடி, சயனக் காவடி போன்ற காவடிகளையும் அமைத்து வருவதோடு உடுக்கு இசைத்துப் பாடுவதிலும் வல்லவர்.*



## வில்லிசைமாமணி கதிரவேலு சத்தியதாஸ்
## வில்லிசைக் கலைஞர்
## பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி மத்தி.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த கதிரவேலு இராசமணி தம்பதியரின் புதல்வனாக அவதரித்தார். ஆரம்பக் கல்வியை சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை ஈவினை விநாயகர் பாடசாலையிலும் கற்றவர். சங்கீதத்தை மகாவித்துவான் வீரமணி ஐயரிடமும் மிருதங்கத்தை மகேந்திரம் மாஸ்ரரிடம் முறையாகக் கற்றவர் 1993ஆம் ஆண்டு இவரது வில்லிசை சந்நிதியான் ஆச்சிரமத்தில் அரங்கேற்றப்பட்டது.

நன்றாகப் பாடும் திறமையும் மிருதங்கம், தபேலா, ஆர்மோனியம் ஆகிய இசைக்கருவிகளை வாசிக்கும் திறமையும் பெற்ற இவர் 1994ம் ஆண்டு சிறுப்பிட்டி ஞானவைரவர் கோயிலில் கலை ஞானமாமணி என்ற விருதை பெற்றார். பின் உடுப்பிட்டி பண்டகப் பிள்ளையார் கோயிலில் வில்லிசைத் தென்றல் என்ற பட்டம் பெற்றார். பின் 2010ம் ஆண்டு கோப்பாய் சைவ சமய அருள்நெறி மன்றம் சிறந்த வில்லிசையாளர் விருது வழங்கிக் கௌரவித்தது. மேலும் வில்லிசைத் திலகம், வில்லிசைக் கலைமாமணி போன்ற பட்டங்களையும் பெற்றவர் இப்போது இலங்கை முழுவதிலும் உள்ள கோயில்களில் வில்லிசை நடத்தி வருகின்றார். வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளி லும் பங்கேற்று பாராட்டுதல்களைப் பெற்றவர். பல ஆலயங்களில் பொன் னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.



## திரு. செல்லத்துரை விசுவலிங்கம்
**B.A. (Cey)Dib.in-Edu.(Jaf.)**
## இலக்கியம்
### சிறுப்பிட்டி மத்தி

1945.08.18ம் ஆண்டு செல்லத்துரை சிவபாக்கியம் தம்பதிகளுக்கு அருந்தவப் புதல்வனாக அவதரித்தார். இளமைக் கல்வியை புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரியில் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எழுத்துப் போட்டியில் முதலிடம் பெற்ற நாள் முதல் பல கவிதைகள், சிறுகதைகளை விழா மலரிலும் பத்திரிகைகளிலும் எழுதி வருகிறார். சிறுப்பிட்டிக் கிராம கீதத்தை இயற்றியுள்ளார். பல விழா மலர்களின் ஆசியராக பணியாற்றியவர். கவியரங்குகளில் பங்குபற்றியவர். சைவப் பேச்சாளர். ஆசிரிய சேவையில் இணைந்து கொண்டார்.

ஆசிரியராக இருக்கும் காலத்தில் மாணவர்கள் மூலம் நாடகங்களை அரங்கேற்றினார். ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றி தமிழ் வளர்த்தவர் மனோன்மணி அம்மன் கோயில் பரிபாலனத் திருப்பணிகளில் ஈடுபட்டு வருமிவர் பொன்னாடைகள் போர்த்தி கௌரவிக்கப்பட்டு பல பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.



# சைவப்புலவர் இளையதம்பி செல்லத்துரை
## இலக்கியம்
**பருத்தித்துறை வீதி, மடத்தடி, சிறுப்பிட்டி வடக்கு.**

1927.06.03இல் இளையதம்பி ஆச்சிக்குட்டி தம்பதிகளுக்கு ஏகபுத்திரனாக அவதரித்தவர். சிறுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும் பின் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரியிலும் கற்றார் 1949ல் மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதர் தேர்வில் சித்திபெற்று பண்டிதரானார். சிறுப்பிட்டி பண்டிதர் தம்பையா, நீர்வேலி பண்டிதர் சிவசம்பு, புத்தூர் பாலபண்டிதர் கனகசபாபதி, அதிபர் வீரசிங்கம், உபஅதிபர் சிவஞானம், பண்டிதர் ச.பஞ்சாட்சரசர்மா ஆகியோரிடம் தமிழ் இலக்கிகண இலக்கியம் கற்று ஆசிரியரானார். திருநெல்வேலி சைவாசாரிய பயிற்சிக் கல்லூரியில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையிடம் கற்றுப் பாண்டித்தியம் பெற்று தமிழ் இலக்கியத் தில் முதற் பரிசு பெற்றார் இந்துபோர்டில் பணிகள் பல புரிந்தார் சைவாசிரியர் கலாசாலைப் பத்திரிகையின் உதவிப் பதிப்பாசிரியராக கடமையாற்றினார்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் 1957ல் சைவசிந்தாந்த பண்டிதர் பட்டமும் 1959ல் தென்னிந்திய சைவசித்தாந்த மகா சமாசத்தால் சைவப்புலவர் பட்டமும் பெற்றார். 1960ல் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தை ஆரம்பித்து பரீட்சை செயலாளராகவும் பின்னர் தலைவர், போசகர் பதவிகளையும் வகித்து இளம்சைவப்புலவர், சைவப்புலவர், பால பண்டிதர், பண்டிதர் வகுப்புகளில் தமிழ் இலக்கணம், இலக்கியம கற்பித்து வருகின்றார்.

1954ல் ஆசிரியராகி பல பாடசாலைகளிலும் கற்பித்து புத்தூர் ஸ்ரீசோமஸ் கந்தக் கல்லூரியிலிருந்து சிறந்த ஆசிரியராக 1985ல் ஓய்வு பெற்றார் இராவ் பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை ஒரு நோக்கு, தாமோதரம், திருவருட்பயன் வினாவிடை, உண்மை விளக்கம் மூலமும் உரையும், திருவுந்தியார் மூலமும் உரையும் திருவிழா ஆற்றுப்படை, ஆறுமுகத் தம்பிரான் இருவர், வள்ளல் மழவராயர் கந்தையா வாழ்க்கை வரலாறு ஆகிய நூல்கள் எழுதியதுடன் இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் 2–11ம் வகுப்பு வரையான தமிழ், சைவசமயம் வழிகாட்டி நூல்களை எழுதிக் கொடுத்தவர். 2–11 வகுப்பு வரை சைவநெறிப் பயிற்சி நூல்களையும் எழுதியுள்ளார்.

சிறுப்பிட்டி வடக்கு ஞானவைரவர், கந்தர்மடம் விநாயகர் திருவூஞ்சற் பதிகங்களைப் பாடியுள்ளதுடன் நாவலர் ம.வி. 150ஆவது ஆண்டு மலர் அகில இலங்கை சைவப்புலவர் சங்க வரலாற்று மலர் எனப் பல விழா மலராசிரியராக விளங்கியுள்ளார்.

சிறுப்பிட்டி தெற்கு, வடக்கு ஆகிய இரண்டு இடங்களிலும் சனசமூக நிலையங்கள் ஸ்தாபிக்க வழிகாட்டி செயலாளராக கடமையாற்றியவர். மடத்தடியில் இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை வாசிகசாலையை ஸ்தாபித்தார்.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் 2000ஆம் ஆண்டில் இவரது தமிழ், சைவசித்தாந்தப் பணிகளை கௌரவித்து வரலாற்றுப் பாமாலை என்ற நூலும் வெளியிட்டு பொன்னாடை போர்த்தி "சைவபூசணம்" என்ற பட்டமும் வழங்கினர். மேலும் பல நிறுவனங்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றவர்.



உ

கணபதிதுணை

## திரு. நாகலிங்கம் பிரேமானந்த்

## கோயிற் பரிபாலனம்

## சிறுப்பிட்டி மேற்கு

சிறுப்பிட்டி மேற்கில் நாகலிங்கம் பொன்னம்மா தம்பதிகளுக்கு 1965.01.12ம் திகதி அவதரித்தார். இளமைக் கல்வியை சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றார். சிறுவயதிலிருந்தே சிறுப்பிட்டி மேற்கு பெருதலை ஆலயத் தொண்டுகளில் ஈடுபட்டு வந்தவர் நிர்வாக சபையை வளப்படுத்தி சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டும். பெருதலை சிவன் ஆலயத்தை வளம்மிக்க தாக்க வேண்டும் என அயராது உழைத்து வருகின்றார். ஆலய மகாகும்பாபிஷேக நிறைவுநாளில் சிவஸ்ரீ தாணுவாசுதேவக் குருக்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.



உ

கணபதிதுணை

## திரு. தம்பு இராமநாதன் (சைவப்பா)

## சிறுப்பிட்டி மேற்கு

## இசை, கோயிற் பரிபாலனம்

சிறுப்பிட்டி மேற்கில் தம்பு சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளுக்கு 1930.01.30 ஆண்டு அவதரித்தவர் இளமைக் கல்வியை சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கற்றார். சிறுவயதிலே சிறுப்பிட்டி மேற்கு ஞான வைரவர் ஆலயத்தில் தொண்டாற்றி திருப்பணிகளிலுதவினார். பஜனை பாடுதல் திருமுறை ஓதல் என்பவற்றோடு சைவ வாழ்வு வாழ்ந்து பலரையும் வாழ வைத்தவர். பல பஜனைப் பாடல்களைப் பாடி எழுதி வெளியிட்டுமுள்ளார். சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவராலயத்தினர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளார்கள்.

# சிறுப்பிட்டி கிராமத்தில் கலை பண்பாட்டை வளர்த்து வருபவர்கள்

## சிறுப்பிட்டி வடக்கு

| | |
|---|---|
| திரு.இ.கணேசன் | காத்தவராயன்கூத்து |
| சைவப்புலவர் இ.செல்லத்துரை | இலக்கியம் |
| திரு.கா.நடராசா | கோயிற் பரிபாலனம் |
| திரு.அ.அருந்தவநேசன் | கோயிற் பஜனை |
| திரு.பொ.தில்லைநாதன் | கரகம் |
| திருமதி. மாலா மகேந்திரன் | கலை |
| திரு.பா.சுதர்சன் | தொழில்நுட்பவியலாளர் |
| திரு.செ.சிறீதரன் | மின்னிணைப்பாளர் |
| திரு.சி.கா.செந்தில்வேல் | இலக்கியம் |
| திரு.வி.சுப்பிரமணியம் | கிராமிய ஆடற்கலை |
| திரு.சி.பாலசுப்பிரமணியம் | ஒலிபெருக்கி |
| செல்வி பிரமிளா கனகசபை | இசை |
| செல்வி த.துர்க்கா | காத்தவராயன் கூத்து |
| திரு. ந. அஞ்சனன் | புகைப்படம் |
| திருமதி ஈஸ்வரி தருமலிங்கம் | நாடகம் |
| திரு.செ.கருணாநிதி | கிராமிய ஆடற்கலை |

## சிறுப்பிட்டி கிழக்கு

| | |
|---|---|
| திரு.சி.சண்முகசுந்தரம் | அண்ணாவியார் காத்தவராயன்கூத்து |
| திரு.க.கந்தசாமி | அண்ணாவியார் காத்தவராயன்கூத்து |
| திரு.தங்கராசா | உடுக்கிசைத்தல |
| செல்வி சுபாசினி யோகநாதன் | சிந்துநடைக்கூத்து |
| செல்வி இந்திராணி கணபதி | சிந்துநடைக்கூத்து |
| செல்வி நிஷாந்தினி நவரத்தினம் | சிந்துநடைக்கூத்து |
| செல்வி மஞ்சுளா அருமைநாதன் | சிந்துநடைக்கூத்து |
| செல்வி அபிநயா சுந்தரலிங்கம் | சிந்துநடைக்கூத்து |
| செல்வி விதுர்ஜனா கோபால் | சிந்துநடைக்கூத்து |
| செல்வி யுகிதா அருமைநாதன் | சிந்துநடைக்கூத்து |
| செல்வி லக்ஷாயினி கந்தசாமி | சிந்துநடைக்கூத்து |
| செல்வி மஞ்சு தவராசா | சிந்துநடைக்கூத்து |
| செல்வி ஜீவசுரபி சிறீகாந்தன் | சிந்துநடைக்கூத்து |
| செல்வி ரம்ஜா மகேந்திரம் | சிந்துநடைக்கூத்து |

## சிறுப்பிட்டி தெற்கு

| | |
|---|---|
| திரு.பூ.மயில்வாகனம் | கோயிற் பரிபாலனம் |
| திருமதி நா.வள்ளிநாயகி | கோயிற் பரிபாலனம் |
| திரு.ச.மூத்ததம்பி | கோயிற் பரிபாலனம் |
| திரு.மு.தேவராசா | கோயிற் பரிபாலனம் |
| திரு.ஆ.கந்தையா | பண்ணிசை, சொற்பொழிவு |

| | |
|---|---|
| திரு.க.இராசன் | நாடகம் |
| திரு.சி.சண்முகசுந்தரம் | காத்தவராயன் கூத்து |
| திரு.ஆ.கணேசலிங்கம் | காத்தவராயன் கூத்து |
| திரு.ம.துஷ்யந்தன் | காத்தவராயன் கூத்து |
| திரு.செ.தவநந்தம் | காத்தவராயன் கூத்து |
| திரு.தி.உருத்திரகுமாரன் | காத்தவராயன் கூத்து |
| திரு.ம.திருமயூரலிங்கம் | காத்தவராயன் கூத்து |
| திரு.க.இராசேந்திரம் | நாடகம் |
| திரு.சி.கிருபாகரன் | நாடகம் |
| திரு.கி.பிரபாகரன் | நாடகம் |
| திரு.க.இராசகோபால் | நாடகம் |
| திரு.இ.சித்தாராஜ் | நாடகம் |
| திரு.ஐ.நந்தகுமார் | நாடகம் |
| திரு.இ.சிவம் | நாடகம் |
| திரு.இ.இராசேந்திரம் | நாடகம் |
| திரு.பதுமதாஸ் | நாடகம் |

**சிறுப்பிட்டி மேற்கு**

| | |
|---|---|
| திரு.பொ.குணசீலன் | வேடங்கள் புனைவு |
| திரு.க.கோடீஸ்வரன் | கோயிற் பரிபாலனம் |
| திரு.அ.சபாரத்தினம் | தேவார பாராயணம் |
| திரு.ச.குலேந்திரநாதன் | புகைப்படம் |
| திரு.து.ஆதவன் | கவிதை |
| திரு.க.தவம் | அறிவிப்பாளர் |
| திரு.நா.பிரேமானந் | கோயிற் பரிபாலனம் |
| திரு.ஆ.சின்னராசா | கோயிற் பரிபாலனம் |
| திரு.த.இராமநாதன் | இசை, கோயிற் பரிபாலனம் |
| திரு.செ.கந்தையா | நாடகம் |
| திரு.பொ.யகதீஸ்வரன் | நாடகம் |
| திரு.பு.சிவனேஸ்வரன் | நாடகம் |
| திரு.க.பிரசாந் | நாடகம் |
| திரு.ஸ்ரீ.விமல்ராஜ் | நாடகம் |
| திரு.ஸ்ரீ.நிரோசன் | நாடகம் |
| திரு.ச.சிவரூபன் | நாடகம் |
| திரு.நி.லக்ஸ்சிகன் | நாடகம் |
| திரு.ம.துஷிபன் | நாடகம் |
| திரு.ம.பிருந்தன் | நாடகம் |
| திரு.இ.தர்சன் | நாடகம் |
| திரு.ம.டளீஸ்கரன் | நாடகம் |
| திரு.சி.பிரதாபன் | நாடகம் |
| திரு.க.சிவோதயன் | நாடகம் |
| திரு.செ.புவி | நாடகம் |
| திரு.க.தவராசா | மிருதங்கம் |

**சிறுப்பிட்டி மத்தி**

| | |
|---|---|
| திரு.சு.கனகராசா | கோயிற் பரிபாலனம் |
| திரு.செ.விசுவலிங்கம் | இலக்கியம் |
| திரு.மு.இராமநாதன் | சமூக சேவை |
| திரு.அ.தருமலிங்கம் | சமூக சேவை |
| திரு.ச.இராசலிங்கம் | புராணபடனம் |

| | சிறுப்பிட்டி மேற்கு | சிறுப்பிட்டி கிழக்கு |
|---|---|---|
| குடும்ப எண்ணிக்கை | 641 | 589 |
| மொத்த சனத்தொகை | 1986 | 1862 |
| ஆண் | 937 | 863 |
| பெண் | 1049 | 999 |
| இந்துக்கள் | 1984 | 1862 |
| இஸ்லாமியர் | 02 | |
| தமிழர் | 1984 | 1862 |

## மது

மாண்புடன் வாழ்ந்த மனிதா
மகத்தான உன் வாழ்வு
மதுவின் அடிமையில்
மண்டியிட்டல்லவா கிடக்கின்றாய்
நடுவீதியிலே
குடி உன் குடியை கெடுக்காதே
குதூகலமாய் வாழ்ந்த – அந்த
நாட்களை எண்ணி கலங்குதுபார்
உன் குடும்பம்
மனிதா மறந்துவிடு மதுவை
மாண்புடன் நீ மானிடனாய்
வாழவேண்டும் இப்பூவுலகில்.

வண்ணமலர் வடிவெடுக்க
வெள்ளிநிலா குடைபிடிக்க
கானமயில் நடையில்
சிறுவையூர் எனும் சிறுப்பிட்டியில்
கல்விதனில் சிறப்புடனே
கலைகள் பலகண்டு
சிலைகள் பல செதுக்கி
கலாசாரத்தின் சிகரமாய்
உயர்ந்துநிற்கும் வேளையிலே
வந்துபார் கலாசாரப்
பெருவிழாவை அன்புடனே
நாம் வாழ்த்தி அறிவுடனே
வாழ்ந்து நிற்போம்.

## கலாசாரம்

யாழ் நகராம் நம்நகரம்
நாலுபேர் கதைத்த நகரம்
பாதையொன்று திறந்ததனால்
பாழாய் போனதே நம்நகரம்
கைக்கொரு கான்போனாம்
கண்ட தெருவிலும் திரியினமாய்
காதிலிரு கடுக்கனாம்
காடையாய் தலைமயிராம்
பெற்றவர்கள் திண்டாட
திரியினமாம் வீதியுலா
பள்ளிசெல்லும் பாவைகூட
பாவியரின் கண்ணில்பட
பரிதவிக்கின்றனர் பயத்தினிலே
கண்டுகொள்ள யாருமில்லை
கலங்குதுபார் யாழ்நகரம்.

**து. ஆதவன்**
**சிறுப்பிட்டி மேற்கு.**


சிறுப்பிட்டி கிராம கலை பண்பாடுகள் மிளிர
எம் வாழ்த்துக்கள்





சீமெந்து, சீற் வகைகள், கம்பிகள், ஆணி வகைகள்,
பைப், பெயின்ற் வகைகள் போன்றவற்றை
மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்: வி.சத்திகிருஷ்ணன்

# பிள்ளையார் ஹாட்வெயர்ஸ்







பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி மத்தி.

சிறுப்பிட்டி கிராம கலைஞர்கள் பண்பாட்டை பேணுபவர்கள்
இன்னமும் ஒளிவீச எம் வாழ்த்துக்கள்

சைக்கிள், மோட்டார் சைக்கிள் ரயர், ரியூப் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்.



# நிஷான் ரயர் வேக்ஸ்



பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி வடக்கு.




சிறுப்பிட்டி கிராம கலை பண்பாடுகள் மிளிர
எம் வாழ்த்துக்கள்
பிள்ளைகளே
தரம் 6-11 வரையான
தரமானகல்வியைப் சுலபமாகப் பெற்றிட
ஆங்கிலச் கல்வியை விருத்தி செய்யவும்
பாரதி
கல்வி நிறுவனம்
முத்துமாரி அம்மன் கோயிலடி,
சிறுப்பிட்டி வடக்கு.
நிர்வாகி
வை.நிஷாந்தன்


சிறுப்பிட்டி கிராம கலைஞர்கள் பண்பாட்டை பேணுபவர்கள்
இன்னமும் ஒளிவீச எம் வாழ்த்துக்கள்
வீட்டுக்குத் தேவையான தளபாடங்கள்,
யன்னல், கதவு
அனைத்தும் செய்து கொடுக்கப்படும்.
கிருபா தச்சுத் தொழிலகம்
உரிமையாளர்: க.கிருபாகரன்
ஜனசக்தி வீதி,
சிறுப்பிட்டி மேற்கு.

சிறுப்பிட்டி கிராம கலை பண்பாடுகள் மிளிர
எம் வாழ்த்துக்கள்

அரிசி, பயறு, உளுந்து, மிளகாய்
போன்றவை அரைத்துக் கொடுக்கப்படும்.


# குமரன்
# அரைக்கும் ஆலை

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி மத்தி.

சிறுப்பிட்டி கிராம கலை பண்பாடுகள் மிளிர
எம் வாழ்த்துக்கள்

வாகனங்களின் ரிங்கர் வேலைகள்,
பெயின்ரிங் வேலைகள்,
சிறப்பாகச் செய்து கொள்ள





# சுப்பர்
# குலசேகரம்

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி தெற்கு.


சிறுப்பிட்டி கிராம கலை பண்பாட்டு விழா சிறப்புற எம் வாழ்த்துக்கள்

ஆரம்பக் கல்வியை ஆழமாய்ப் பதித்திட

தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தி பெற்றிட

நாடுங்கள்

கலைஞானி புலமைப்பரிசில்



கல்வி நிறுவனம்




நிர்வாகி
சி.ஞானகுமாரன்

துர்க்கையம்மன் கோயிலடி,
சிறுப்பிட்டி வடக்கு.

சிறுப்பிட்டி கிராம தமிழறிஞர்கள் இராவ்பகதூர்
சி.வை.தாமோதரம்பிள்ளையின் பணிகள் சிறப்புற எம் வாழ்த்துக்கள்

HEMA INDUSTRY

ஜாம் வகைகள் நெல்லி கிரஸ்,
திராட்சை கோடியல், திராட்சை பழச்சாறு,
ஏனைய பழரச பானங்கள், ஊறுகாய்,
மோர், மிளகாய் முதலியன





உரிமையாளர்: செல்வராசா சுரேஸ்குமார்

0779594326
0213210919

HEMA INDUSTRY
*Siruppiddy West,*
*Neervely.*

சிறுப்பிட்டிக் கிராம கலை பண்பாடுகள் சிறக்க
நம் கலைஞர்கள் பெருக வாழ்த்துபவர்கள்

"தூய்மையான நீரே உலகின் முதன் மருந்து"



தூய்மையான நீர் அருந்திட
சுவிஸ் மினரலின்
Swiss Mineral
100% Pure



"யாழருவி"யை நாடுங்கள்

சுவிஸ் மினரல்
231, கோவில் வீதி,
நல்லூர்.

உரிமையாளர் :
செ. சிவசுப்பிரமணியம்
சிறுப்பிட்டி மேற்கு.

சிறுப்பிட்டிக் கிராம கலை பண்பாடுகள் சிறக்க
நம் கலைஞர்கள் பெருக வாழ்த்துபவர்கள்

சிறுப்பிட்டி எரிபொருள் நிரப்பு நிலையம்

உரிமையாளர் :
நா. விசுவலிங்கம்





பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி மத்தி.

றூபன் பிறின்டேர்ஸ் ஆனைக்கோட்டை. 0776624386